# உதயன்

சுடர் : 41
கதிர் : 189

புதன்கிழமை
03 ஜூன் 2026

வைகாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50





### லலித், குகன் வழக்கு

# நிகழ்நிலைச் சாட்சியம்; கோத்தாவுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்ட லலித், குகன் ஆகியோர் தொடர்பான வழக்கில் நிகழ்நிலையில் சாட்சியம் அளிப்பதற்கு கோத்தாபய ராஜபக்சவுக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

»15

## தாயகப் பாடலைப் பதிவிட்ட கிளிநொச்சிப் பாடகர் கைது!

### அவரிடம் தீவிர விசாரணை

கிளிநொச்சி, ஜூன் 3

தாயக எழுச்சிப் பாடலை எடிட் செய்து தனது தளத்தில் பதிவிட்ட கிளிநொச்சியை சேர்ந்த பாடகர் ஒருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது

»15





## வலிந்து காணாமலாக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்குக

### யாழ்ப்பாணத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் நீதி வழங்குமாறு கோரியும், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் அரசியல் தீர்வை வழங்குமாறு வலியுறுத்தியும் சம உரிமை இயக்கம், சமூக நீதிக்

»15



## செம்மணிப் புதைகுழியில் எங்கும் என்புக் குவியல்!

### எட்டு என்புத்தொகுதிகள் நேற்று அடையாளம் இணைந்த நிலையிலும் என்புத் தொகுதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 3

செம்மணிப் புதைகுழி மீதான மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் பகுதி நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவரும் நிலையில், நேற்றுமட்டும் எட்டு என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

»15

## செம்மணிப் புதைகுழி மேலும் விரிவடைவு!

யாழ்ப்பாணம், ஜூன் 3

செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணி இடம்பெற்றுவரும் பகுதி மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்

»15

### வவுனியா மாநகரசபை

## மேயர் மீதான தடையை நீக்கியது உயர்நீதிமன்று

### பிரதி மேயர் மீதான தடை தொடரும் என்றும் அறிவிப்பு

வவுனியா, ஜூன் 3

வவுனியா மாநகரசபை மற்றும் அதன் மேயர் ஆகிய தரப்பினரின் செயற்பாட்டுக்குத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவை உயர்நீதிமன்றம் நேற்று ரத்துச் செய்தது.

»15

### இந்தியத் தூதுவர்

## சந்தோஷ் ஜா யாழ். வருகை



### உதவித் திட்டங்களை வழங்கினார்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்திருந்த நிலையில் அவர் பல்வேறு

»15

### மன்னார் நகரசபையின்

## தவிசாளருக்கு எதிரான விசாரணை கைவிடுவதாக ஆளுநர் தெரிவிப்பு!

மன்னார், ஜூன் 3

மன்னார் நகரசபைத் தவிசாளருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட விசாரணை நடவடிக்கைகளையும், வர்த்தமானி அறிவித்தலையும் கைவிடுவதாக ஆளுநர் தரப்பு நீதிமன்றத்தில் தெரிவித்ததைத்

»15

### வடமேல் மாகாண

## முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவதற்கு தயாராம்



கொழும்பு, ஜூன் 3

அனைத்து எதிரணிகளும் ஓரணியில் திரளும் பட்சத்தில் மாகாணசபைத் தேர்தலில் வடமேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு தயார் - என்று நாடாளுமன்ற உறுப்

»15

### திருவள்ளுவர் பண்பாட்டு மையம்

## நம்பிக்கை நிதியத்திடம் கையளிக்க உடன்படுக!

### யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு இந்தியத் தூதுவர் அழுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை நம்பிக்கை நிதியத்திடம் ஒப்படைக்க இணங்குமாறு யாழ்ப்பாணம் நகரசபை மேயர் மதிவதனியிடம் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

»15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**கொவிசெத**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4448
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 05 47 60 68
விசேட எழுத்து M

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1515
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 01 24 33 37

**NLB ஜய**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0474
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 3 5 6 2

**மெகா பவர்**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2554
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 02
வெற்றி இலக்கங்கள் 22 35 65 77

**மஹஜன சம்பத**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6206
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 6 2 5 6 6 7

**தன நிதானய**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2236
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 39 51 59 75
விசேட எழுத்து I

**சுப தவசக்**
திகதி 02.06.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0322
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 14 28 40

# கியூ.ஆர். கோட்டா முறைமை பின்பற்றாவிடின் நடவடிக்கை!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 3**

**உள்நாட்டில் எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது அமுலிலுள்ள கியூ.ஆர். கோட்டா முறைமை இனிவரும் காலங்களில் மிகவும் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் எஸ்.ராஜகருணா அறிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசாங்கத்தின் கியூ.ஆர் கோட்டா விதிகளுக்கு அமைய பொதுமக்களுக்கு எரிபொருளை விநியோகிக்காத அல்லது கோட்டா முறைமையைத் துல்லியமாகப் பின்பற்றாத எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உடனடியாகக் கண்டறியப்பட்டு, அவற்றுக்கான மாதாந்த சலுகைக் கொடுப்பனவுகள் முற்றாக நிறுத்திவைக்கப்படும்.

உலகச் சந்தை நெருக்கடிகளால், கடந்த மே மாதத்தில் மட்டும் எரிபொருளுக்காக நாட்டை விட்டு வெளியேறிய வெளிநாட்டு நாணயத்தின் அளவு 524 மில்லியன் டொலராக பதிவாகியுள்ளது. இந்த டொலர் செலவீனத்தை தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் எமது நாடு தொடர்ச்சியாகத் தாங்கிக்கொள்வது மிகக் கடினம். நாட்டை விட்டு வெளியேறும் டொலரின் அளவை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தாவிட்டால், அது எதிர்காலத்தில் உள்நாட்டில் எரிபொருள் விலை மேலும் பல மடங்காக அதிகரிப்பதற்கு வழிவகுத்து, ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் நசுக்கிவிடும்.

தற்போதுள்ள க்யூ.ஆர் தொழில்நுட்பக் கட்டமைப்பை மேலும் இறுக்கமாக்கி, கடுமையான முறையில் எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தத் தேவையான புதிய மென்பொருள் மாற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்களும் தங்களின் எரிபொருள் தேவைகளைச் சுயகட்டுப்பாடுடன் குறைத்துக்கொண்டு, கியூ.ஆர் முறைமைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 0914
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 2 3 8 2 7 7

**Super Ball**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3180
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 09 31 76 77

**சனிதா**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கம் 09 12 57 74
வெற்றி வாரம் 5341

**SASIRI**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் 1010
வெற்றி இலக்கம் 09 24 50

**லக்ன ராசி**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
விருச்சிகம்
வெற்றி இலக்கம் 16 18 21 39
சீட்டிழுப்பு வாரம் 4892

**KAPRUKA**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கம் 03 48 67 72
வெற்றி வாரம் 2356

**அத கோடிபதி**
திகதி 02.06.2026
தினம் செவ்வாய்க்கிழமை
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கம் 23 65 75 76
வெற்றி வாரம் 3006

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 5 வீதம் உயர்வு!

கொள்கலன் போக்குவரத்துக் கட்டணங்கள் நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும்வகையில் 5 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விலைத் திருத்தங்கள் காரணமாக டீசல் விலை சுமார் 25 ரூபாவால் அதிகரித்துள்ளது. அதனுடன் இணைந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலையும் கணிசமான அளவு உயர்ந்துள்ளது. மசகு எண்ணெய், டயர்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள் உள்ளிட்ட போக்குவரத்துத் துறைக்கு அவசியமான பொருள்களின் விலை உயர்வு மற்றும் பராமரிப்புச் செலவுகள் அதிகரிப்பு ஆகியவற்றின் காரணமாகவே இந்தக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கடந்த 5 மாதங்களில்

# டெங்குத் தொற்றாளர்கள் 33,572 பேர் அடையாளம்!



கொழும்பு, ஜூன் 3

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 33,572 டெங்குத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 19 மரணங்களும் பதிவாகியுள்ளதாக சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். மே மாதத்தில் மட்டும் 8321 டெங்குத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்தத் தொற்றாளர்களில் பெரும்பாலானோர் கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். 50 சதவீதமானோர் மேல் மாகாணத்திலிருந்தே பதிவாகியுள்ளனர். 72 சுகாதார அதிகாரி பிரிவுகள் அவதானமிக்க பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும் சமூக சுகாதார விசேட மருத்துவ நிபுணர் துஷானி தாபரேரா தெரிவித்துள்ளார். (ச-இ)

# ‘மெனிஞ்சைடிஸ்’ வைரஸ் 237 நோயாளர்கள் பதிவு

கொழும்பு, ஜூன் 3

நாட்டின் பல பகுதிகளில் ‘மெனிஞ்சைடிஸ்’ (மூளைக்காய்ச்சல்) வைரஸ் தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 237 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நோய்த்தொற்று முதன்முதலில் ஏப்ரல் 15ஆம் திகதி மாத்தறை மாவட்டத்தின் தெனியாய பகுதியில் கண்டறியப்பட்டது. பின்னர் ரிகில்லகஸ்கட, கண்டி, பதுளை, வெலிமடை மற்றும் தியத்தலாவ ஆகிய பகுதிகளிலும் நோயாளர்கள் பதிவாகினர். பதிவாகியுள்ள நோயாளர்களில் பெரும்பான்மையானோர் பாடசாலை மாணவர்களாவர்.

தற்போதைய நிலைவரப்படி 59 நோயாளர்கள் மாத்திரமே மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏனைய அனைவரும் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தி ஆகியன இந்த நோயின் அறிகுறிகளாகும். நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, சுத்தமான குடிதண்ணீரைப் பயன்படுத்துமாறும், இயலுமானவரை எப்போதும் கொதித்தாறிய நீரைக் அருந்துமாறும் சுகாதாரப்பிரிவினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-இ)

# துப்பாக்கி லைசென்ஸுக்கு சான்றிதழ் பெறல் கட்டாயம்

கொழும்பு, ஜூன் 3

தனிப்பட்ட பாதுகாப்பு துப்பாக்கி அனுமதிப்பத்திரதாரர்கள் தங்களது துப்பாக்கிகளின் செயற்பாட்டுத்திறன் மற்றும் விவரங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. 2026ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திர புதுப்பித்தலுக்கு இணங்க, அனுமதிப்பத்திரத்தைப் பெற்று ஆறு மாதங்கள்பூர்த்தியாகும்போது, அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குதுப்பாக்கியைச் சமர்ப்பித்து, துப்பாக்கி யின் செயல்திறன் மற்றும் அதன் இலக்கம் ஆகியவை அனுமதிப்பத்திர இலக்கத்துடன் ஒத்துப்போகிறதா என்பதை ஆராய் ந்து, அதற்கான சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு பாதுகாப்பு சபையால் அனைத்து தனிப்பட்ட பாதுகாப்பு துப்பாக்கி அனுமதிப்பத்திரதாரர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, 2026 ஆம் ஆண்டுக்குரிய அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்து அரை வருடம்நிறைவடைந்தவுடன், அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குதுப்பாக்கியைச் சமர்ப்பித்து, அதன் செயற்பாட்டுத்திறன் மற்றும் இலக்க ஒப்பீட்டுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு தொடர்புடைய அனைத்து அனுமதிப்பத்திர தாரர்களுக்கும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




### பிணைமுறி மோசடி வழக்கில்

# ரவி, அர்ஜுன விடுதலையை இரத்தாக்கியது உயர்நீதிமன்று

கொழும்பு, ஜுன் 3

**இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பர்பசுவல் டிரெஷரீஸ் லிமிடெட் நிறுவனம் உள்ளிட்ட தரப்பினரை வழக்கிலிருந்து விடுதலை செய்து மேல் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு முற்றிலும் தவறானது என உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.**

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பில், பிரதிவாதிகளுக்கு எதிராகப் பொதுச்சொத்துச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கை எவ்வித தடையுமின்றி மேல் நீதிமன்றத்தில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லமுடியும் எனவும், இந்த விவகாரத்தை மிக விரைவாக விசாரித்து முடிக்குமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி பிணைமுறி வழங்கலின் போது, பல பில்லியன் ரூபா அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறி சட்டமா அதிபரினால் இந்த வழக்கு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## வேலைவாய்ப்பு மோசடி; கடத்தல்காரர் கைது

கொழும்பு, ஜுன் 3

டுபாயில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பணமோசடியில் ஈடுபட்டுவந்த டுபாய் சுத்தா என்பவரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் விசேட விசாரணைப் பிரிவின் பொலிஸ் குழுவினர் கடுவலை பகுதியில் வைத்துக் கைதுசெய்துள்ளனர்.

டுபாயில் வேலை பெற்றுத் தருவதாகக்கூறி இவர் 7 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு, வாக்குறுதியளித்தபடி வேலை பெற்றுத்தரவில்லை என நபர் ஒருவர் பணியகத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர் சுற்றுலா விசா மூலம் டுபாய்க்கு வேலைக்காக ஆள்களை அனுப்பிவைக்கும் கடத்தல்காரர் என்று இதற்கு முன்னரும் பணியகத்தினால் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## ஞானசார தேரர் வழக்கு 26ஆம் திகதி அழைப்பு!

கொழும்பு, ஜுன் 3

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு எதிரான, வழக்கின் விசாரணைத் திகதியை நிர்ணயிப்பதற்காக எதிர்வரும் ஜுன் மாதம் 26ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இஸ்லாமிய மார்க்கத்துக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதாகக் கூறி சட்டமா அதிபரால் அவருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ச-இ)

# நளின் பெர்னாண்டோ மனு பரிசீலனைக்கு!

'கரம்போர்ட்' விவகாரம் தொடர்பாக சட்டமா அதிபரால் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை நிராகரிக்குமாறு கோரி, சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தாக்கல் செய்த மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக ஜுன் மாதம் 17ஆம் திகதி அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, பிரதிவாதி சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றத்தில் சமர்ப்பணங்களை முன்வைக்கையில், இந்தச் சம்பவம் தொடர்பாக இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்ட எனது கட்சிக்காரருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றினால் 30ஆண்டுகள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவ்வாறு இருக்கையில், சட்டமா அதிபரால் அதே குற்றச்சாட்டுகள் தொடர்பாக மற்றுமொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரே குற்றச்சாட்டுக்காக இரண்டு முறை வழக்குத் தொடர்வது சட்டத்துக்கு முரணானது என்பது நிரூபணமாகும். எனவே பிரதிவாதிக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை சட்டத்துக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார். முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த நீதியரசர்கள் இந்த மனுவின் சமர்ப்பணங்களை உறுதிப்படுத்துவதற்காக ஜுன் மாதம் 17ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டனர். (ச-இ)

## ஒண்டா நில்லுங்கோவன்!

'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' எண்டமாதிரி சிலர் தங்களுக்கு என்ன கஷ்டம் வந்தாலும், தாங்கள் எப்பவும் மேன்மக்கள் தான் எண்டதை நிரூபிச்சுக்கொண்டுதான் இருப்பினம். கொஞ்சநாளைக்கு முதல் சிவாஜிலிங்கத்தாருக்கு கிட்னி மாத்தவேணும் எண்டு சொல்லி, ஆக்களிட்ட உதவி கேட்டவர். அவர் உதவி கேட்ட அடுத்த நிமிசத்தில இருந்து எல்லாப் பக்கத்தில இருந்தும் சனங்கள் தன்னெழுச்சியா தங்கட கையில இருக்கிற காசை அவருக்கு அனுப்பத் தொடங்கிட்டினம். பிறகு ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா ஒரு மில்லியன் ரூபா எண்ட பெருந்தொகையைப் போட. அதைப் பார்த்திட்டு புலம்பெயர் அமைப்புகளும், அரசியல்வாதியளும் அவருக்குக் கூடுதலா காசை அனுப்பி சிவாஜியரை உதவி வெள்ளத்தில திக்குமுக்காட வைச்சுப்போட்டினம். அதால அவர் கேட்டதைவிடவும் கூடக் காசு சேர்ந்திட்டுது எண்டு சிவாஜியரே அறிவிச்சுப் போட்டார்.

கொடுத்தாருக்குக் குறைவில்லை எண்டமாதிரி, காசு கூட வந்தாலும் அதை சிவாஜியர் என்ன செய்தவர் எண்டு ஆரும் கேள்வி கேக்கப் போறேலை. ஆனாலும் சிவாஜியர் இப்பவும் தான் ஒரு ஜெண்டில்மன் எண்டதைச் செயலில காட்டிக்கொண்டுதான் இருக்கிறார். சிவாஜியர் தனக்கு உதவி கேட்ட நேரத்தில இன்னொரு முன்னாள் போராளியும் கிட்னி மாத்த ஆரும் உதவுங்கோ எண்டு கேட்டவர். உடனேயே தனக்கு வந்த காசில ரண்டு லட்சத்தை அந்த முன்னாள் போராளிக்கு சிவாஜியர் குடுத்திட்டார். அதுக்குப் பிறகும் தனக்குச் சேர்ந்த காசில, தன்ர மருத்துவச் செலவு போக மிச்சமாயிருக்கிற காசை, உதவி தேவைப்படுற மாவீரர், போராளியள் குடும்பங்களுக்கு குடுக்கப் போறதாவும் சிவாஜியர் அறிவிச்சிருக்கிறார். ஊரார் வீட்டுக் காசில ஊதாரித்தனம் செய்யிற இண்டைய காலகட்டத்தில தனக்கெண்டு சேர்ந்த காசை அடுத்தவைக்கும் குடுக்க நினைக்கிற அவரின்ர மனசுக்குத்தான் இப்பிடிக் கட்சி பேதமில்லாமல் இவ்வளவு காசு சேர்ந்தது.

சிவாஜியர் என்னதான் தன்ர வாழ்க்கையை சனத்துக்காக அர்ப்பணிச்சதால சொத்துப்பத்துச் சேர்க்காட்டியும் தனக்கெண்டு மனிசரைச் சேர்த்து வைச்சிருக்கிறார். அதால தான் சிவாஜியர் வாய் விட்டுக் கேட்டவுடன் எல்லாப் பக்கத்தில இருந்தும் இப்பிடி உதவியள் குவிஞ்சது. அதிலயும் பகிடி என்னெண்டால் இவ்வளவு நாளும் சிவாஜியர் ஆரை எதிர்த்து அரசியல் செய்தாரோ, எந்தக் கட்சி அவரின்ர காலை ஊர்காவற்றுறையில வைச்சு வெட்டிச்சோ அவையெல்லாம் ஓடிப்போய், சிவாஜியரை நேரில பார்த்து ஆறுதல் சொல்லி, காசும் குடுத்திட்டுப் போயிருக்கினம். இப்பிடி சிவாஜியரை கட்சி பேதமில்லாமல் போய்ப் பார்த்து உதவி செய்த அரசியல் வாதியள், இதேமாதிரி தங்கட ஈகோக்களைத தூக்கி எறிஞ்சு போட்டு, தமிழ்ச் சனத்துக்காகவும் குரல் குடுக்க ஒண்டா நிண்டால் என்ன? ஒருக்கால் யோசிச்சுப் பாக்கமாட்டினமோ?

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலியன் மன்னனின் 407 ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 3
சங்கிலியன் மன்னனின் 407ஆவது நினைவு தினம் எதிர்வரும் 6ஆம் திகதி, சங்கிலியன் தோப்பில் காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை இடம் பெறவுள்ளது.

இதுதொடர்பில் சங்கிலியன் மன்னன் நினைவு தினக்குழுச் செயலாளர் என். பி.சிறிந்திரனின் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது- அன்றையதினம் நடைபெறும் கண் காட்சியில், சங்கிலியனின் வீரம் செறிந்த வரலாற்றுப் பதிவுகள் காட் சிப்படுத்தப்படும். எமது அடுத்த சந்த திக்கு வீர வரலாறுகளைக் கைமாற்ற வேண்டும் என்பதே இதன் நோக்கம். சங்கிலியன் போன்று அனைத்து சைவத்தமிழ் மக்களும், சைவம் காக்கப் புறப்படவேண்டும். அதுவே சங்கிலிய மன்னனுக்கு நாம் செய்யும் கைமாறாகும். இன்று வறுமை, பொரு ளாதார நெருக்கடி, குடும்பப் பிரச்சி னைகள் உள்ள சைவத்தமிழ் குடும் பங்களை வஞ்சகத்தனமாக, கபடத்த னமாக ஏமாற்றி மதமாற்ற நடவடிக் கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்ற னர். அதைத் தடுக்க நாம் ஒன்றுபட வேண்டும் -என்றுள்ளது. (க)



# தற்காலிகக் கடைகளை அகற்றும் பணி நிறுத்தம்!

வவுனியா, ஜூன் 3
வவுனியா மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலி கக்கடைகளை அகற்றும் பணிகள் தற்காலி கமாக நிறுத்தப்பட்டுள்ளன.

கொறவப்பொத்தான வீதியின் இரு பகுதி யிலும் இருந்த நடைபாதைக் கடைகள் அகற்றப்பட்டு, அங்கு வியாபாரச் செயற் பாடுகளை மேற்கொண்டுவந்த வியாபாரி களுக்கு, வவுனியா பொலிஸ் நிலை யத்துக்கு முன்பாக, மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் தற்காலிக இடங் கள் ஒதுக்கப்பட்டு, வியாபாரச் செயற்பாடு கள் இடம்பெற்று வந்தன. இந்தநிலையில் அங்கு அமைக்கப்பட்ட வியாபார நிலை யங்கள் உரிய அனுமதிகளைப் பெற்று அமைக்கப்படவில்லை. எனவே அவற்றை அகற்றவேண்டும் என்று மாநகரசபை யின் ஆணையாளரால் அண்மையில் அறிவித்தல் ஒட்டப்பட்டது. அதையடுத்து மாநகரசபையின் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் வியாபார நிலையங்களை அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். இதற்கு வியாபாரிகள் எதிர்ப்புத் தெரிவித் தனர். மாநகரசபையின் முன்னாள் துணை முதல்வர் ப.கார்த்தீபன், இந்த நடவடிக்கைக்குத்தனது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். அத்துடன் அவர் நிலை மைகளைத் தெளிவுபடுத்தியதை அடுத்து கடைகளை அகற்றும் பணிகள் தற்காலி கமாக நிறுத்தப்பட்டுள்ளன எனத் தெரி விக்கப்பட்டது. (க-110)

# வர்த்தகர்களுக்கு விசேட கூட்டம்

பருத்தித்துறை, ஜூன் 3
பருத்தித்துறை நகரில், கட்டாய விடுமுறையை நடை முறைப்படுத்துவது தொடர் பான விசேட கூட்டம் எதிர் வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத் தித்துறை நகரசபை பொது மண்டபத்தில் நடைபெறும். வர்த்தகர் சங்கத் தலைவர் இரா.மயூதரன் தலைமை யில் நடைபெறவுள்ள கூட் டத்தில், பருத்தித்துறை பிர தேச செயலர் ந.திருலிங்க நாதன், பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் வின்சென் டீ போல் டக் ளஸ்போல், பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் ச.பிரசாத் மற்றும் பருத்தித் துறைதலைமைப்பொலிஸ் பொறுப்பதிகாரி கருணா ரத்ன ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் தீர்மானமிக்க முடிவு எடுக்க விருப்பதால், வர்த்தகர்கள் அனைவரையும் பங்குபற் றுமாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (க-100)

# நல்லூரில் யோகக்கலை

யாழ்ப்பாணம், ஜூன் 3
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவ கார அலகால், உடல், உள மேம்பாட்டுக்காக இலவச மாக நடத்தப்பட்டு வரும் யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு, நல்லூர்க்கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கை யற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வாராந்தம் சனி, ஞாயிறு தினங்களிலும், அரச விடு முறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணி வரை நடைபெறும் வகுப்புகளில் ஆர்வ முள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ளமுடியும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்தக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் களும் வழங்கப்படும்.

பயில விரும்புவோர் அன்றைய தினம் நேரடியாக வருகைதந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளமுடியும். மேலதிக தகவல்களை 021222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித் துள்ளார். (க)

# வருடாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 3
யாழ். வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத் தின் வருடாந்தப் பெருவிழா, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து எதிர் வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தேர்த்தி ருவிழாவும், எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெ றும். (க)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். சகோதரவகையில் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அதனால் பிரச்சினை எதுவும் ஏற்படுவதற்கில்லை.

**இடபம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவும். காரியங்கள் இழுபறிக்குப்பிறகேமுடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைப்பதில் தாமதம் ஏற்படும்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாள். காலையிலேயே கோயில்களுக்குச் சென்று வழி படும்வாய்ப்பு ஏற்படக்கூடும். தாயின் உடல் ஆரோக் கியம் மேம்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் –மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**சிம்மம்:** அரசாங்க அதிகாரிகளின் ஆதரவில் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தையின் எதிர் பார்ப்பை பூர்த்திசெய்வீர்கள். சகோதரர்களால் ஆதா யம் உண்டாகும். மறைமுக எதிரிகளின் தொல்லை கள் விலகும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படாது. ஆனால், மற்றவர் களுடன் வீண் விவாதங்களில் ஈடுபடவேண்டாம்.

**துலாம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக் கும். கணவன் – மனைவிக்கிடையே இருந்த கருத்துவேற்றுமை நீங்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். தாய்வழி உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவன் – மனைவிக்கி டையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவுகளை துணிந்து எடுப்பீர் கள். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். காரியங் கள் அனுகூலமாகும்.

**மகரம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுக்கிரகத்தால் காரியங்கள் அனுகூலமாகமுடியும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சியில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை.

**மீனம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். இளைய சகோதரர்கள் ஆலோசனை கேட்டு வருவார்கள். எதிர்பாராத விருந்தினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# எல்லோருக்கும் தராசு ஒன்றே!

அனைத்து மனிதர்களும் சட்டத்தின் முன் சமம் என்பது நவீன ஜனநாயகத்தின் ஆணிவேர். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை 'சட்டத்தின் ஆட்சி' என்பது மதத்தலைவர்களின் விவகாரங்களில் மட்டும் முடங்கிப்போய்விடுமோ என்ற அச்சம் மீண்டும் எழுந்துள்ளது. அநுராதபுரம் அட்டமாஸ் தானதிபதி பல்லேகம ஹேமரத்தன தேரர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு, நாட்டின் பொதுவான சட்ட நடைமுறைகளைத் தவிர்த்து, 'பௌத்தசங்க ஒழுக்கவிதிகளின்' (கதிகாவத்) கீழ் தனி நீதிமன்ற விசாரணை நடத்தப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளமை நீதித்துறையின் மாண்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆன்மிகத் தலைவர்கள் எவ்வளவு செல்வாக்கு மிக்கவர்களாக இருந்தாலும், குற்றவியல் சட்டத்தின் பார்வையில் அவர்கள் 'சாதாரண குடிமக்களே' என்பதை சர்வதேச முன்னுதாரணங்கள் உரக்கச் சொல்கின்றன.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில், பெரும் செல்வாக்கு மிக்க மதத்தலைவர்களாகத் திகழ்ந்த டேனியல் சவாலா மற்றும் டெர்ரி ரீட் ஆகியோருக்குச் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வழக்குகளில் அமெரிக்க நீதிமன்றம் இந்த மே மாதம் வழங்கிய கடுமையான சிறைத்தண்டனைகள் உலகுக்குச் சொல்லும் செய்தி மிகத் தெளிவானது. மத நிறுவனங்கள் தமக்கெனச் சொந்தமாக ஒழுக்கவிதிகளை வைத்திருக்கலாம்; ஆனால், ஒரு மதத்தலைவர் கொலை, கொள்ளை அல்லது பாலியல் குற்றங்களை இழைக்கும்போது அவருக்கு அந்தச் சபை விதிகள் பாதுகாப்பு வழங்கமுடியாது. உலகளாவிய ரீதியில் கத்தோலிக்க திருச்சபை கூட 2021-இல் திருத்தந்தை பிரான்சிஸ் மேற்கொண்ட சீர்திருத்தத்தின் மூலம், கர்தினால்கள் மற்றும் ஆயர்கள் மீதான குற்றவியல் விசாரணைகளைச் சாதாரண நீதிமன்றங்களே மேற்கொள்ளும் வகையில் சிறப்புச் சலுகைகளை இரத்துச் செய்துள்ளது.

இலங்கையில் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையின் பேரில் 'சங்க நீதிமன்ற' விசாரணை முறையைக் கொண்டுவர முனைவது, நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பை இரண்டாம் நிலைக்குத் தள்ளும் செயலாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப்பிரகடனம் மற்றும் சர்வதேச குடிமையியல் உரிமைகள் உடன்படிக்கை ஆகியவற்றின் படி, எவரும் தங்களின் மத அந்தஸ்தைக் காட்டி குற்றவியல் விசாரணைகளில் இருந்து விலக்கு பெற முடியாது. அண்டை நாடான இந்தியாவில் ஆசாராம் பாபு முதல் பிப் பிராங்கோ வரை பல மதத்தலைவர்கள் பொதுச் சட்டத்தின் கீழேயே விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்கையில், இலங்கையில் மட்டும் மதத்தலைவர்களுக்கு என ஒரு தனி நீதி பரிபாலன முறைமை எதற்காக?

சட்டம் அனைவருக்கும் சமம் என்று மேடைதோறும் முழங்கும் புதிய அரசாங்கம், நடைமுறையில் ஒரு பிரிவினருக்கு மட்டும் 'நிழல் நீதிமன்றங்களை' அனுமதிப்பது அதன் நம்பகத்தன்மைக்கே பெரும் அவப்பெயரைத் தேடித்தரும். மத ஒழுக்கங்களை மீறுவதற்கும், குற்றவியல் சட்டங்களை மீறுவதற்கும் இடையே பெரும் வித்தியாசம் உண்டு. பாலியல் குற்றங்கள் என்பது ஒரு சமூகத்துக்கு எதிரான வன்கொடுமை. அதனைப் பொலிஸாரும், சிவில் நீதிமன்றங்களுமே விசாரிக்கவேண்டும். 'கதிகாவத்' விதிகளால் பாதிக்கப்பட்டவருக்கு ஒருபோதும் நீதி வழங்கமுடியாது. எனவே, சர்வதேசப் பொதுநீதியின் அடிப்படையில், மதப்போர்வையில் நிகழும் குற்றங்களைச் சாதாரணக் குடிமக்களுக்குரிய சட்டத்தராசிலேயே நிறுக்க வேண்டும். இல்லையேல், 'சட்டத்தின் ஆட்சி' என்பது இலங்கையில் வெறும் காகித அலங்காரமாகவே எஞ்சிவிடும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை**

**பொருள்:** ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.




# நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்த ஆண்டுக்கு ரூ. 5 பில்லியன் செலவு!

**கொழும்பு, ஜூன் 3**

**இலங்கையில் நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் ஆண்டுதோறும் 5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெருந்தொகையைச் செலவிடுவதாக தேசிய மருத்துவர் நிரோஷன் கமகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் காணப்பட்ட நீர்வெறுப்பு நோய் மரணங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், கடந்த சில ஆண்டுகளில் மருத்துவ முன்னேற்றங்கள் காரணமாக மரண வீதம் மிக வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது.
2025ஆம் ஆண்டில் இலங்கையில் 14 நீர்வெறுப்பு நோய் மரணங்கள் பதிவாகியுள்ளன. 2030ஆம் ஆண்டில் இந்த மரணங்களை பூஜ்ஜியமாக்கி, எவரும் உயிரிழக்காத நாடாக இலங்கையை உருவாக்குவதே எமது இலக்காகும்.
மக்களுக்கான தடுப்பூசிகளுக்காக மாத்திரம் அரசாங்கம் ஆண்டுக்கு சுமார் 800 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது. நாய்கள் மற்றும் ஏனைய விலங்குகளுக்கான தடுப்பூசிகளுக்காக சுமார் 2.5 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நீர்வெறுப்பு நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஆண்டுக்கு சுமார் 5 பில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது-என்றார். (ச-இ)



## புதையல் தோண்டிய மூவர் கைது

கொழும்பு, ஜூன் 3

சட்டவிரோதமான முறையில் புதையல் தோண்டிய மூன்று சந்தேகநபர்கள், அகழ்வாராய்ச்சி உபகரணங்களுடன் தெஹியத்தகண்டிய பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தெஹியத்தகண்டிய முவகம்மன பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் 24, 27 மற்றும் 37 வயதுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெஹியத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச-இ)

## ஓட்டோ — டிப்பர் விபத்தில் ஒருவர் சாவு; 4பேர் காயம்

கொழும்பு, ஜூன் 3

பொலநறுவை - மட்டக்களப்பு வீதியின் புனானி பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் நால்வர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வாழைச்சேனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று, எதிர்த்திசையில் வந்த டிப்பர் வாகனத்துடன் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் வாழைச்சேனையைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞர் ஒருவரே சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## குறைவடையும் ஆறுகளின் நீர்மட்டம்

கொழும்பு, ஜூன் 3

கடந்த சில நாள்களாக மழைவீழ்ச்சி படிப்படியாகக் குறைந்து வருவதால், ஆறுகளின் நீர்மட்டம் குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



# 2 நாள்களில் 24 பேர் வாகன விபத்துகளில் சாவு

கடந்த 29 மற்றும் 30 ஆகிய இரு தினங்களில் 19 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளதுடன் அதில் 24 பேர் உயிரிழந்துள்ளனர் என போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டப்ளியூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார். பொலிஸ் ஊடகப் பிரிவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது- இந்த விபத்துகளில் 29 பாரதூரமான விபத்துகளும், 96 சிறு விபத்துகளும், 19 சேதங்களை ஏற்படுத்திய விபத்துகளும் பதிவாகியுள்ளன. விபத்துகளில் 13 பாதசாரிகளும், 7 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களும், மோட்டார் சைக்கிளின் பின்னால் பயணித்த ஒருவரும், ஒரு சைக்கிள் ஓட்டுநரும் உயிரிழந்துள்ளனர். மேலும் ஒரு சாரதி, ஒரு பயணி என ஒட்டு மொத்தமாக 24 பேர் உயிரிழந்துள்ளனர் - என்றார். (ச-இ)

**நாளை**
வியாழக்கிழமை- வைகாசி -21
04.06.2026
சுபநேரம் : 07.22 – 08.52
ராகுகாலம் : 01.22– 02.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருள் விலை உயர்த்தாவிடின் விநியோகக் கட்டமைப்பு குலையும்

## வலுசக்தி அமைச்ச தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 3**

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நீடித்துவரும் போர்ச்சூழல் காரணமாக உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை உச்சம் தொட்டுள்ள நிலையில், தற்போதைய கட்டத்தில் உள்நாட்டில் எரிபொருள் விலையை அதிகரிக்காவிட்டால் நாட்டின் ஒட்டுமொத்த எரிபொருள் விநியோகக் கட்டமைப்பும் முற்றாகப் பாதிக்கப்பட்டு முடங்கும் அபாயம் ஏற்படும் என்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

உலகச் சந்தையில் விலை அதிகரித்தபோதிலும், நுகர்வோர் மீதான சுமையைக் குறைக்கத் திறைசேரி நிதியை நஷ்டமாக ஏற்றுக்கொண்டுள்ளது. எரிபொருள் விநியோகத்தின்போது ஏற்படும் நட்டத்தைச் சமநிலைப்படுத்தி, விநியோகக் கட்டமைப்பைத் தடையின்றிப் பேணுவதற்காக மட்டும் அரசாங்கத்தினால் 57 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சந்தையில் தற்போது டீசல் ஒரு லீற்றரின் உண்மை விற்பனை விலை 536 ரூபாவாகக் காணப்பட வேண்டும். எனினும், பொதுமக்கள் நலன் கருதி அது 407 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் ஒரு லீற்றர் டீசலுக்கு 129 ரூபாவை அரசாங்கமே நஷ்டமாக ஏற்றுக்கொண்டுள்ளது. இதே போன்று பெற்றோல், மண்ணெண்ணெய் உள்ளிட்ட சகல எரிபொருள்களுக்குமான இறக்குமதி மற்றும் சுத்திகரிப்புச் செலவுகளின் போது ஏற்படும் நட்டத்தைத் திறைசேரியே தற்போதைய சூழலில் சுமந்துவருகின்றது. எரிபொருள் விலை என்பது எமது தனிப்பட்ட முடிவல்ல, உலகச் சந்தையின் விலைக்கு அமைவாகவே அது தீர்மானிக்கப்படுகிறது. சர்வதேசச் சந்தையில் விலை குறைந்தால், அதன் முழுமையான பயனை அடுத்த கணமே பொதுமக்களுக்குக் குறைப்பு விலையாக வழங்குவோம் - என்றார். (ச-இ)



# அரசு தோல்விக்கு அஞ்சி தேர்தலை முடக்கக்கூடாது

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தை அசைக்கமுடியுமா, முடியாதா என்பதைப் பார்ப்பதற்கு தைரியமிருந்தால் மாகாணசபைத் தேர்தலை உடனே நடத்துங்கள் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட தரமற்ற நிலக்கரிக் கொள்வனவால் அரசுக்கு பல பில்லியன் ரூபா அசுர நிதி இழப்பு ஏற்பட்டது. அந்த ஊழல் இழப்பை முகாமைத்துவம் செய்து ஈடுகட்டுவதற்காகவே, தற்போதைய வலுசக்தி அமைச்சு ஒவ்வொரு மாதமும் திட்டமிட்டு எரிபொருளின் விலையை அதிகரித்துவருகிறது.

தரமற்ற நிலக்கரிக் கொள்வனவினால் திருடப்பட்ட பில்லியன் கணக்கான மக்கள் பணத்தை மீள அறவிடுவதற்கு இந்த அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடந்த எமது அரசாங்கத்தின் காலத்தில் எரிபொருள் இறக்குமதி செய்யப்படும்போது, அதன் உத்தியோகபூர்வ வரி நேரடியாக வலுசக்தி அமைச்சரின் பொக்கெட்டுக்கே செல்வதாக ஜே.வி.பி.யினர் மேடைகளில் கூச்சலிட்டார்கள். தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த எரிபொருள் வரிகள் அனைத்தையும் முழுமையாக இரத்துச்செய்து, விலையைக் குறைப்போம் என்று மக்களுக்குப் வாக்குறுதி அளித்தார்கள்.

இன்று ஆட்சிக்கு வந்துவிட்டு வரிகளைக் குறைக்காமல் வற்வரியையும் உயர்த்திவிட்டு, ஒவ்வொரு மாதமும் விலையை உயர்த்துகிறார்கள்.

இனிவரும் காலங்களில் நாட்டில் தங்களைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சியும் ஆட்சிக்கு வர இடமளிக்கக் கூடாது என்ற சர்வாதிகார மனநிலையில் இருந்துக்கொண்டு இந்த அரசாங்கம் செயற்படுகிறது - என்றார். (ச-இ)

# பொருளாதார வளர்ச்சிக்கு அநுரவிடம் திறமையில்லை

## ராஜித சேனரத்ன தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன் 3

மத்திய கிழக்கு போர்ச்சூழலை வெறும் சாக்காகக் காட்டி, தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் தனது நிர்வாகத் திறமையின்மையால் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் அதல பாதாளத்துக்குள் தள்ளிவருகிறது என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மத்திய கிழக்கில் ஹோர்மூஸ் நீரிணை மூடப்பட்டதால் தான் இங்கு எரிபொருள் விலை உயர்கிறது என அரசாங்கம் கூறுகிறது. ஆனால், 2022 இல் ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றபோது இங்கு நிலவியது சாதாரண நெருக்கடி அல்ல. இலங்கைக்குள் ஒரு உலகப்போரே நடந்துகொண்டிருந்தது. உணவில்லை, மின்சாரமில்லை, டொலருமில்லை. இந்தநிலையை வெறும் இரண்டே வருடங்களில் ரணில் மாற்றி முறியடித்தார். நாட்டின் பொருளாதாரத் திட்டத்தின்படி 2026ஆம் ஆண்டாகும் போது இலங்கையின் டொலர் இருப்பு 10 பில்லியன் டொலரைத் தாண்டியிருக்க வேண்டும். இல்லையெனில் 2028 இல் கடன்களைச் செலுத்தமுடியாமல் நாடு மீண்டும் வங்குரோத்தாகும். ஆனால் தற்போதைய அரசிடம் வெறும் 6.2 பில்லியன் மட்டுமே உள்ளது. ரணில் விக்கிரமசிங்க தனது பொருளாதார உத்திகள் மூலம் 2024 இல் 3.2 வீதமாகக் குறைத்துக் காட்டினார். ஆனால், ஆட்சிக்கு வந்தால் வற்வரியைக் குறைப்போம் எனக்கூறி மக்களை ஏமாற்றிய அநுரவின் தற்போதைய நுகர்வோர் அரசு, இன்று வற்வரியை 20 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்த்தி, மக்களின் உழைப்பை உறிஞ்சிவிட்டு வருமானத்தை 6 வீதமாகக் கூட்டியுள்ளது என்று பொய்யுரைக்கிறது - என்றார். (ச-இ)

# ஐ.எம்.எப். நிபந்தனைகளை மீள்பரிசீலனை செய்யுங்கள்

## மல்கம் ஆண்டகை தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 3

இலங்கையின் சீரழிந்துவரும் பொருளாதாரத்தை மீண்டும் சீரமைத்து மேம்படுத்த வேண்டுமாயின் கடந்த 1978ஆம் ஆண்டு முதல் நாட்டில் நடைமுறையிலுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையை உடனடியாக மறுபரிசீலனை செய்யவேண்டும். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வது காலத்தின் கட்டாயமாகும் என கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

ஒரு காலத்தில் அத்தியாவசியப் பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து தன்னிறைவு பெற்றிருந்த இலங்கை, தற்போது ஊசி முதல் கொண்டு அனைத்து இறக்குமதிகளை மாத்திரமே நம்பியிருக்கும் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்தத் தோல்வியடைந்த பொருளாதார மாதிரியை மாற்றியமைக்கவேண்டிய தருணம் இதுவே. சர்வதேச நாணயநிதியம் ஒரு சாதாரண வணிக வங்கி போன்றது. சர்வதேச நாணயநிதியத்தின் கடுமையான நிபந்தனைகளுக்கு அமையவே நாட்டை நிர்வகிப்போம் என்று அரசாங்கம் முடிவெடுத்தால், எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் குழப்பங்களும் பொருளாதார நெருக்கடிகளும் தொடரவே செய்யும். – என்றார். (ச–இ)

# சவேந்திர சில்வாவுக்கு அரசியல் நாட்டமில்லை

## ஐ.ம.ச. உறுப்பினர் திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 3

முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து, வட மத்திய மாகாணசபை முதல்வர் வேட்பாளராகக் களமிறங்கவுள்ளார் என்று வெளியாகும் தகவலை போலியானது என்று ஐ.ம.சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் தெரிவித்துள்ளார். சவேந்திர சில்வா வடமத்திய மாகாணசபையின் முதல்வர் வேட்பாளராக போட்டியிடவுள்ளார். அவர் ஐக்கிய மக்கள் சக்தியின் பொலநறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சனுக்கு நெருக்கமானவர் என்றும் சமூகவலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டுவருகின்றன.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ் நெல்சன் தெரிவித்துள்ளதாவது சவேந்திர சில்வா நாட்டுக்காகச் சேவையாற்றிய இராணுவ வீரர். அவர் அப்படியான முடிவை எடுக்கமாட்டார். அரசியல் பற்றி அவர் பேச விரும்புவதில்லை. மாகாணசபைத் தேர்தல் பற்றி நான் அவருடன் கதைக்கவில்லை. அவ்வாறு கதைத்திருந்தால் கூட அவர் என்னைத் திட்டி இருப்பார். எனவே இந்தத் தகவல் போலியானது. ஆளுங்கட்சியின் சலவை இயந்திரங்களே இப்படியான தகவல்களைப் பரப்பி வருகின்றன. கட்சி மட்டத்திலும் இதுபற்றி கலந்துரையாடப்படவில்லை. சவேந்திர சில்வாவை அரசியலுக்குக் கொண்டு வருவதற்கு நான் முயற்சி எடுக்கின்றேன் என்ற தகவலும் பொய்- என்றார். (க -44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருப்பெயர்ச்சி பலன்கள் 2026



ஆண்டுக்கு ஒருமுறை பெயர்ச்சி அடையக்கூடிய குரு பகவான் இந்தப் பராபவ வருடத்தில், வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி 26.05.2026 அன்று பகல் 11 மணிக்கு மிதுனம் ராசியில் இருந்து தனது உச்ச ராசியான கடகத்துக்குப் பெயர்ச்சியாகின்றார். திருக்கணித பஞ்சாங்கத்தின் படி ஜூன் 2 ஆம் திகதி பெயர்ச்சி நடக்கின்றது என்று ஜோதிடர்கள் தெரிவிக்கின்றனர். குருவின் இந்த நகர்வால் அதிர்ஷ்டமான மற்றும் கவனமுடன் இருக்கவேண்டிய ராசியினர் யார்?, அவர்களுக்கான ஒருவருட பலன்கள் என்ன என்பதை இங்கு பார்ப்போம்.




**துளைகளைக் கையாளப் பழகினால் மூங்கில் குழலாகும், துன்பங்களைக் கையாளப் பழகினால் வாழ்க்கை இனிமை யாகும் என்ற வரிகளைக் கேட்டு துன்பங்களைக் கடந்து வாழும் மிதுன ராசிக்காரர்களே!**

குரு பகவான், ஜூன் 2 முதல் உங்கள் ராசிக்கு, 2ம் இடத்தில் அமர்ந்து பலன் தரப் போகிறார். இதுவரை ஜென்ம குருவாக இருந்துகொண்டு, பல வகையில் பிரச்சினைகளையும் மன உளைச்சலையும் கொடுத்து வந்த குரு பகவான், இப்போது 2ம் இடத்துக்கு வருவதால், நிம்மதி பிறக்கும். உங்களின் நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு இனி மதிப்பு கூடும். கணவன் மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.

வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை உயரும். வீட்டில் தடைபட்டுக் கொண்டிருந்த சுபநிகழ்ச்சிகள், இனி தடபுடலாக நடக்கும். சொந்த பந்தங்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு உங்களின் வாழ்க்கைத் தரம் உயரும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். நின்றுபோன கட்டிட வேலைகள் இனி முழுமை அடையும்.

**குரு பகவான் பார்வைப் பலன்கள்:**

குரு பகவான் உங்கள் ராசிக்கு 6ஆம் இடத்தைப் பார்ப்பதால், உங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கடன் பிரச்சினைகளைக் குறைப்பீர்கள். அரசு காரியங்களில் வெற்றியுண்டு. வீண் பழி, வதந்திகளில் இருந்து விடுபடுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். குரு பகவான் 8ஆவது வீட்டைக் பார்ப்பதால், எதிர்பார்த்தபடி பணம் வரும்.

முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். வெளிநாடு செல்ல விசா கிடைத்து திட்டமிட்டபடி செல்வீர்கள். குலதெய்வம் கோயிலுக்கு செலுத்த வேண்டிய நேர்த்திக்கடனை நிறைவேற்று வீர்கள். குரு பகவான் உங்கள் ராசிக்கு 10வது வீட்டைப் பார்ப்பதால், கௌரவப் பதவிகள் தேடி வரும். வி.ஐ.பிகள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். அரசு பதவியில் இருப்பவர்களுக்கு வெற்றி கிட்டும். தொழிலில் சில மாற்றங்களைச் செய்வீர்கள்.

## பணவரவு அதிகரிக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி மற்றும் புதிய முதலீடுகள் பலன் தரும்

**குரு பகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

குரு பகவான் தனது நட்சத்திரத்தில் 02.06.26 முதல் 18.06.26 வரை பயணம் செய்வதால் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். சகோதரிக்கு திருமணம் கூடி வரும். அஷ்டமாதிபதியான சனி பகவானின் நட்சத்திரத்தில் 18.06.26 முதல் 19.08.26 வரை குருபகவான் பயணம் செய்வதால் வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உங்கள் ராசிநாதனும், சுகாதிபதியுமான புதனின் நட்சத்திரத்தில் 19.08.26 முதல் 31.10.26 வரை மற்றும் 25.01.27 முதல் 26.06.27 வரை குரு பகவான் பயணம் செய்வதால் பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். கேதுவின் நட்சத்திரத்தில் 31.10.26 முதல் 25.01.27 வரை குருபகவான் செல்வ தால் எதிரிகள் அடங்குவார்கள். சொந்த ஊரில் மதிப்புக் கூடும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். கொடுக்கல் வாங்கலில் நிம்மதியுண்டு. ஹோட்டல், ரியல் எஸ்டேட், வாகன உதிரிபாகங்கள், எலக்ட்ரானிக் வகைகளால் இலாபமடைவீர்கள். ரசனைக்கு ஏற்ப கடையை மாற்றி அமைப்பீர்கள். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் ஆதரவு கொடுப்பார்கள். தொல்லை தந்த பணியாட்களை மாற்றுவீர்கள்.

உத்தியோகத்தில் நீண்ட நாளாக காத்துக் கொண்டிருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு இனி உங்கள் இருக்கை தேடி வரும். மேலதிகாரி உங்களை புரிந்து முக்கியமான பொறுப்புகளை ஒப்படைப்பார். சக ஊழியர்கள் நேசக்கரம் நீட்டுவர். கணினி துறையினருக்கு வெளிநாட்டு கம்பெனியிலிருந்து வாய்ப்புகள் தேடி வரும். கலைத்துறையினருக்கு புது வாய்ப்புகள் தேடி வரும். இந்த குருப் பெயர்ச்சி நினைத்ததை முடிக்கும் காலமாக அமையும்.

# பிளாஸ்ரிக் போத்தல்கள் சேகரிப்புத்திட்டம் ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு, ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் போத்தல்கள் சேகரிப்பு நிகழ்ச்சித் திட்டம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், உத்தியோகத்தர்கள் தங்களது வீடுகள், அலுவலக வளாகங்கள் மற்றும் சுற்றுப்புறங்களில் பயன்படுத்தப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட, ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் போத்தல்களைச் சேகரித்து முறையாக ஒப்படைத்தனர்.

சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் போத்தல்களுக்குப் பதிலாக, வீட்டுத் தோட்டங்களை வளப்படுத்தும் நோக்கில் பயறு, வெண்டி, பூசணி மற்றும் கீரை விதைகள் வழங்கப்பட்டன. (க)

# ஆடியபாதம் வீதியின் புனரமைப்பு ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தியை அண்டியுள்ள ஆடியபாதம் வீதியின் ஒருபகுதிப் புனரமைப்புப் பணிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நல்லூர்ப் பிரதேச சபையினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனையொட்டிச் திருநெல்வேலிச் சந்தியிலிருந்து திருநெல்வேலிச் சந்தைப் பக்கமாகவுள்ள ஆடியபாதம் வீதியின் ஒரு பகுதி நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் இன்று புதன்கிழமையும் ஒரு வழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, திருநெல்வேலிச் சந்தியை அண்டிய பகுதியில், ஆடியபாதம் வீதியில் மழைகாலங்களில் அதிக வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கருத்திற் கொண்டு குறித்த வீதியின் சுமார் 170 மீற்றர் நீளமான இரண்டு பக்கங்களையும் மழை வெள்ளநீர் வடிந்தோடுவதற்கு ஏற்ற வகையில் நல்லூர்ப் பிரதேச சபையின் சுயவருமான நிதியில், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் மேற்பார்வையில் நல்லூர்ப் பிரதேச சபை புனரமைப்புச் செய்யவுள்ளது. (ச-66,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மத்திய கிழக்கு போர்ச்சூழலால் பணவீக்கம் 7 வீதம்வரை உயரும்!



## மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 3**

**மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தொடர்ந்து நீடித்துவரும் தீவிர போர்ப் பதற்ற நிலைமைகள் மற்றும் உலகளாவிய சர்வதேச சந்தையில் மளமளவென அதிகரித்துவரும் கச்சா எண்ணெய் விலை காரணமாக, இலங்கையின் ஒட்டுமொத்த பணவீக்கம் எதிர்வரும் மாதங்களில் 7வீதம் வரை உயரக்கூடும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- மத்திய கிழக்கு போர்ச்சூழலால் ஏற்பட்டுள்ள உலகளாவிய எண்ணெய் விலை உயர்வின் நேரடித் தாக்கத்தின் காரணமாக, இலங்கையின் பணவீக்கம் ஏற்கனவே 5% என்ற இலக்கைத் தாண்டி, கடந்த மே மாத இறுதியில் 5.5%ஆகப் பதிவாகியுள்ளது. தற்போதைய இந்த சர்வதேசப் பதற்ற நிலைமைகள் இன்னும் சில வாரங்களுக்குத் தொடருமானால், நாட்டின் பணவீக்க விகிதம் 7வீதம் வரை மிக வேகமாக உயரக்கூடிய சாத்தியக்கூறுகள் தெளிவாகத் தென்படுகின்றன.

இந்தத் திடீர்விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கும், சந்தையிலுள்ள அதிகப்படியான நுகர்வோர் தேவையைக் குறைப்பதற்கும் மத்திய வங்கி ஏற்கனவே தயார் நிலையில் உள்ளது. இதன் முதற்கட்ட மாக, கடந்த வாரம் பணவியல் கொள்கை கணிசமாகக் கடுமையாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சந்தையின் பணப்புழக்கத்தைக் கட்டுப்படுத்தி, பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணவும், பணவீக்கத்தை மீண்டும் ஒரு சமநிலைக்குக் கொண்டுவரவும் தேவையான அனைத்து நிதியியல் நகர்வுகளும் முடுக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் இலங்கையர்கள் தாங்கள் சட்டபூர்வமாக உழைத்த எந்தவொரு நிதியையும், முறையான வங்கி நடைமுறைகள் ஊடாக இலங்கைக்கு அனுப்புவதற்கு எவ்விதத் தடைகளோ அல்லது புதிய கட்டுப்பாடுகளோ விதிக்கப்படவில்லை- என்றார். (ச-இ)



# சேவைநலன் பாராட்டுக்கள்

**திருமதி. கல்யாணி கலாமோகன்**

**SLTS - I, BA, N.D.T, PGDE**

சேவை விபரம்:

- யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் (யாழ் வலயம்) - 2001.03.14 - 2014.01.16
- யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை (யாழ் வலயம்) - 2014.01.17 - 2019.02.15
- யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் (வலிகாமம்) - 2019.02.16 - 2026.03.31

**எமது பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் மதிப்பிற்குரிய ஆசிரியை திருமதி. கல்யாணி கலாமோகன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டி வாழ்த்துவதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமையடைகிறது.**

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்

(CS/61567) J-1

# திருத்தம்

28.05.2026 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் INVITATION FOR BID 2026_02 எனும் தலைப்பில் எம்மால் பிரசுரிக்கப்பட்ட இரு வேலைகளுக்கான கேள்வி அறிவித்தலில் 30.07.2026 ஆம் திகதி எனப் பிரசுரிக்கப்பட்ட Bid Security Validity Period 27/08/2026 ஆம் திகதியாக இரு வேலைகளுக்கும் திருத்தம் செய்யப்படுகின்றது. என்பதனை அறியத்தருகிறோம்.

Chairman
Regional Procurement Committee,
Office of the Regional Assistant Commissioner of Local Government,
Sivan Pannai Road, Jaffna.
Date – 03.06.2026

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

# வடக்கில் நீதித்துறை மீது மோசமான அடக்குமுறை!


## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

மாற்றம் என்ற போர்வையில் ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், கடந்த அரசாங்கங்களை விட மோசமாக நீதித்துறை மீது அடக்குமுறைகளை மேற்கொள்கின்றது. குறிப்பாக நீதிபதி அலெக்ஸ்ராஜாவின் இடமாற்றம் வடக்கின் மீதான மோசமான அடக்குமுறையை எடுத்துக்காட்டுகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த அலெக்ஸ்ராஜா திடீரென பதுளைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் பின்னணியில் அவர் கையாண்ட வழக்குகளே காரணம் என்று யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது. ஆட்சியாளர்கள் தாங்கள் நினைத்தால் நீதித்துறையை அடக்குவோம் என்பதற்கு சிறந்த ஒரு உதாரணமாக இது அமைகின்றது. நீதிபதி அலெக்ஸ்ராஜா பருத்தித்துறை நகரசபை விவகாரம், வடக்கில் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற ஆசிரியர் இடமாற்றம் உள்ளிட்ட விடயங்களை நீதியின் பக்கமாக அணுகியதால், அவர் மீதான கவனத்தை அரசாங்கத் தரப்பு திருப்பியுள்ளது. அரசாங்கத்தின் தவறுகளை நீதித்துறை சுட்டிக்காட்ட முற்படும் போது, அதற்கு எதிராக நீதித்துறையை அடக்க முனைவது ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். ஆகவே சட்டத்தின் பாதுகாவலராகச் செயற்படும் நீதிபதிகள், இவர்களின் செயற்பாடுகளை எண்ணி மனம் தளராது, நீதியைத் தொடர்ந்து நிலைநாட்டுவர் என நம்புகின்றோம்-என்றார். (சு-27)



# காங்கேசன் - நாகபட்டினம் கப்பல் சேவை மீள ஆரம்பம்

**யாழ்ப்பாணம், ஜூன் 3**

காங்கேசன்துறைக்கும் நாகபட்டினத்துக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சுபம் நிறுவனத்தின் சிவகங்கை கப்பல் இன்று புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சேவையில் ஈடுபடும் எனக் கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம். ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடலில் ஏற்பட்ட அசாதாரண கால நிலை காரணமாக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த கப்பல் பழுதடைந்த நிலையில் போக்குவரத்துச் சேவை இடைநிறுத்தப்பட்டது. மீண்டும் கப்பல் போக்குவரத்து வழமைபோல் செவ்வாய் தவிர்ந்த ஏனைய ஆறு நாள்களும் இடம்பெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-27)

# வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

**வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவு சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.06.2026 சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்க பிரேரணை இருப்பின் அப்பிரேரணைகளை 13.06.2026 ம் திகதிக்கு முன்பாக செயலாளருக்கு எழுத்து மூலம் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.**

செயலாளர்
வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கம்
இல. 27, பஜார் வீதி, வவுனியா
தொடர்புகளுக்கு : 024 222 3367


CS/61570) J-1

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்**

(வரி மதிப்பீட்டாளர் – யாழ் மாநகரசபை, முன்னாள் யாழ் மாவட்ட சாரண ஆணையாளர்)

திதி:-அபரபட்ச திருதியை



மின்னிமுழங்குவதுபோல் கணப்பொழுதில்
நிகழ்ந்துவிட்ட உங்கள் பிரிவு ஏன் இத்தனை
அவசரமாய் யார் அழைத்து எங்கு சென்றீர்கள்?
அப்பா...நான்காண்டுகள் ஆனபோதும் திரும்பிவர
மாட்டீர்களா என்று ஏங்கித் தவிக்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி
வண்ணார்பண்ணை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

தோற்றம் 01.03.1942
மறைவு 18.05.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

03.06.2026
புதன்கிழமை

புதன் பொய்கை

அறிவுரை சொல்
பவனை விட
அதை ஏற்றுச் செயற்
படுத்துபவன்
சில சமயங்களில்
உயர்ந்து விடுகிறான்.

-கார்ல் வின்சென்



# ஈழவிடுதலைப்போருக்கு காலம் தந்த பாணர்

■ சமரன்

"குண்டு விழுந்தாலென்ன வீடு
குலுங்கி இடிந்தாலென்ன.
உடல் துண்டு பறந்தாலென்ன நாங்கள்
துடித்து மடிந்தாலென்ன..
தமிழீழத்தாகம் தணியாது எங்கள்
தாயகம் யாருக்கும் பணியாது.."

ஒரு காலம் இந்தப் பாடலும் இதைப் பாடிய தேனிசை செல்லப்பாவின் குரலும் ஈழக் கனவின் நெருப்புப் பிழம்பாய் இருந்தன. பல்லாயிரக்கணக்கான போராளிகளின் எழுச்சிக்கும் மனவுறுதிக்கும் இந்தப் பாடல் மட்டுமல்ல, இதைப்போல இன்னும் ஏராளம் எழுச்சிப்பாடல்கள் உரமாக அமைந்தன. அது விடுதலைக்கான கனவுக்காலம். அந்தக் கனவை நனவாக்குவதற்காக உயிரையும் அர்ப்பணித்து உழைத்த காலம், போராடிய காலம். அந்தக் காலத்தின் குரலாக தேனிசை செல்லப்பாவும் இருந்தார். தேனிசை செல்லப்பாவின் குரலைக் கேட்டவர் யாரும் எளிதில் மறந்து விட முடியாது. எளிமையும் உறுதியும் இயல்பும் கூடிய மைந்த குரலின் தனித்த அடையாளமே செல்லப்பா.

"வானுயர்ந்த காட்டிடையே நான் இருந்து பாடுகின்றேன்
வயல் வெளிகள் மீது கேட்குமா? இது வல்லை வெளி தாண்டிப் போகுமா? .."

என்று உச்சத்தொனியில் செல்லப்பா பாடும்போது, அது எங்களுடைய தந்தையோ, மூத்த அண்ணனோ, அயலில் உள்ள யாரோ ஒருவரோ பாடுவதைப்போல மிக நெருக்கமானதாக இருக்கும். செல்லப்பாவினுடைய குரலின் சிறப்பும் வசீகரமும் பாடும் தொனியும் மிகச் சாதாரணமானதாக இருப்பதேயாகும். நம்முடைய வீட்டில் உள்ளவர்கள் பாடுவதைப் போலிருக்கும். இதுதான் அவரையும் அவருடைய பாடல்களையும் எல்லோருக்கும் பிடிக்கக் காரணம். செல்லப்பாவின் குரலுக்கேற்ற மாதிரி கவிஞர் காசி ஆனந்தனின் பாடல்களும் எளிமையும் யதார்த்தமுமாக இருந்தன. இந்தக் கூட்டுவெற்றியே செல்லப்பாவின் வெற்றியாக, செல்லப்பாவின் பாடல்களின் ஈர்ப்பாக இருக்கிறது.

செல்லப்பா தமிழ்நாடு திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகிலுள்ள சிங்கிலிப்பட்டி எனும் ஊரில் பிறந்தவர். பதினோராவது வயதில் தன் தந்தையை இழந்துவிட்டார். அதனால் அவர்மேல் குடும்பச்சுமை ஏறியது. அந்த நாள்களில் நடிகர் எம்.ஆர்.ராதா சினிமாவிலும் நாடகத்திலும் பிரபலமாக இருந்தார். பெரியாருடைய திராவிட இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டார். செல்லப்பாவுக்கு எம்.ஆர்.ராதாவின் மேல் பற்றிருந்தது. எம்.ஆர்.ராதா தூத்துக்குடிக்கு வருவதை அறிந்த செல்லப்பா, அவரைப்போய்ச் சந்தித்தார். அந்தச் சந்திப்பு செல்லப்பாவின் வாழ்க்கையில் திருப்பமாக அமைந்தது. செல்லப்பாவைப் பாடச்சொல்லிக் கேட்ட ராதா, திருச்சி சங்கிலியாண்டபுரத்திலுள்ள தன் வீட்டுக்கு வந்து சந்திக்கச் சொன்னார், அதேபோல் திருச்சி சென்ற செல்லப்பாவைத் தன் குழுவில் சேர்த்துக் கொண்டார். சில நாள்களுக்குப் பிறகு சென்னை வால்டாக்ஸ் ரோட்டிலுள்ள ஒற்றைவாடைத் தியேட்டரில் தன் குழுவைக் கொண்டுவந்து தங்கவைத்தார் ராதா. அவரது நாடகத்தில் பாடிக்கொண்டும், சிறுசிறுவேடத்தில் நடித்துக்கொண்டும், ராதாவின் குழுவிலேயே இருந்தார் செல்லப்பா.

இந்தச் சூழலில் அப்போதைய 'நாம் தமிழர் கட்சியின்' தலைவர் சி.பா.ஆதித்தனாரோடு சேர்ந்து மன்னார்குடியில் பட எரிப்புப் போராட்டத்திற்கு பெரியார் ஏற்பாடு செய்திருந்தார். இந்திய தேசப்படத்தை எரிப்பதுதான் போராட்டம். போராட்ட மேடையில் எம்.ஆர்.ராதாவின் நாடகமும் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. போராட்ட மேடையில் பாட்டுக்கச்சேரி ஒன்றை நடத்த ஆதித்தனார் விரும்பினார். அதற்குப் பாடகர்கள் யாரும் வராதநிலையில் செல்லப்பா மேடையேற்றப்பட்டார். அவரது பாடல் ஆதித்தனாருக்குப் பிடித்தது. செல்லப்பாவை நாம் தமிழர் கட்சியின் முழுநேரப்பாடகராக நியமித்தார் ஆதித்தனார். அப்படியே கட்சி அலுவலகத்திலேயே தங்கவைத்தார், அங்கிருந்தபடியே நாம் தமிழர் கட்சி மேடைகளிலும், திராவிடர் கழக மேடைகளிலும் பாடிக் கொண்டிருந்தார் செல்லப்பா.

அந்த நேரத்தில்தான் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஐந்து இலட்சம் மலையகத்தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். அதற்காக ஏ.எல்.நாராயணனை வைத்து ஒரு பாடலை எழுதி செல்லப்பாவைப் பாடவைத்தார் ஆதித்தனார்:

*"செந்தமிழா மனம் பொங்குதடா.. சிங்களர் கொடுமை மிஞ்சுதடா*
*இதை நேரு பண்டிதரும் பார்க்கவில்லை*
*சொந்த ஊரு மந்திரியும் கேட்கவில்லை..*
*யாரும் துணைக்கிங்கே வரவில்லை*
*ஆறுதல் வார்த்தைகள் தரவில்லை*
*செந்தமிழா மனம் பொங்குதடா சிங்களர் கொடுமை மிஞ்சுதடா"*



இதனை மேடைதோறும் உணர்ச்சி மேலிடப் பாடினார் செல்லப்பா. அன்று இந்தப் பாடல் பல்லாயிரக்கணக்கானோரை உணர்ச்சிவயப்படுத்தியது.

தொடர்ந்து திராவிட இயக்க மேடைகளில் பாடிக்கொண்டிருந்த செல்லப்பாவின் குரலும் பாவமும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பேபி சுப்பிரமணியம் என்ற இளங்குமரனுக்குப் பிடித்தது. அப்பொழுது விடுதலைப்புலிகள் தமிழ்நாட்டில் முகாமிட்டிருந்தனர். இளங்குமரன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு செல்லப்பாவை ஒருநாள் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் அழைத்துச் சென்றார். அந்தச் சந்திப்பு மயிலாப்பூர் நாகேஸ்வரராவ் பூங்காவில் நிகழ்ந்தது. ஏற்கனவே செல்லப்பாவைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த பிரபாகரன், செல்லப்பாவிடம் ஈழ விடுதலைப் பாடல்களைப் பாடித்தரும்படி கேட்டார். அதற்கு ஒப்புக்கொண்ட செல்லப்பா ராமச்சந்திர ஆதித்தனின் உதவியை நாடினார். பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதற்கான செலவை ராமச்சந்திர ஆதித்தன் ஏற்றுக்கொண்டார்.

எல்டாம்ஸ் சாலையிலிருந்த சாந்தோம் என்ற கிறித்துவ கலைத்தொடர்பு நிலையத்தில் பாடல்கள் பதிவு செய்யப்பட்டன. காசி ஆனந்தன் பாடல்களை எழுதினார். பாடல்களைக் கேட்ட அக்கலைத்தொடர்பு நிலையத்தின் நிர்வாகி ஒலிப்பதிவுக்கூடத்திற்கான வாடகையை வாங்க மறுத்துவிட்டார். ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் பிரதியெடுக்கப்பட்டு ஈழத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. அங்கு இயக்கப்போராளிகளிடமும், பொது மக்களிடமும் அவை பெரும் வரவேற்பைப் பெற்றன.

"வாருங்கள் புலிகளே தமிழீழம் காப்போம்
வாழ்வா சாவா ஒருகை பார்ப்போம்
முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றமல்லவா
முடிசுமந்து நாங்கள் ஆண்ட கொற்றமல்லவா
இந்த மண்ணின் மக்கள் எங்கள் சுற்றமல்லவா
தமிழீழ மண்ணை மறந்து வாழ்தல் குற்றமல்லவா..."


இப்படி ஒரு பாட்டு என்றால், அடுத்த பாடல் - அழகான அந்தப் பனைமரம் அடிக்கடி நினைவில் வரும்...

"தமிழீழ மண்ணே உன்னை மறப்பேனா நீ என் அன்னை"

(மறுபக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சட்டரீதியான குற்றங்களை செயற்கை நுண்ணறிவால்கூட விசாரிக்கலாம்! – கலாநிதி சுனில் அபேரத்ன



○ நேர்காணல் சுலக்சன்

இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சட்டத்தரணிகள் சங்கத்துடன், மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த 'டிஜிற்றல் சட்டப்பணி' என்ற கருப்பொருளில் வடமாகாணத்தில் உள்ள சட்டத்தரணிகளுக்கும், பொலிஸாருக்குமான சட்டக் கருத்தரங்கு ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தரங்கு தொடர்பிலும், தமது சங்கத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரான கலாநிதி சுனில் அபேரத்ன வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.

**கேள்வி:** இந்தத் தீர்மானமிக்க கருத்தரங்கை கொழும்பைத் தவிர்த்து முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானித்ததன் நோக்கம் என்ன?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** நாட்டின் தற்போதைய பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக 'டிஜிற்றல் பொருளாதாரம்' உருவெடுத்துள்ளது. சட்ட வல்லுநர்கள் என்ற வகையில், இந்த இலக்கை அடைய எமது பங்களிப்பை வழங்குவது தேசிய கடமையாகும். குறிப்பாக, ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் வடமாகாணம் மிக வேகமாக வளர்ந்துவரும் பிராந்தியம்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வட பகுதியில் முதலீடு செய்ய அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்கள் ஒரு நாட்டுக்கு வரும்போது முதலில் பார்ப்பது அங்குள்ள 'தரவுப் பாதுகாப்புச் சட்டம்' (Data Protection Law) மற்றும் 'சைபர் பாதுகாப்பு' (Cyber Security) கட்டமைப்பைத்தான். எமது உள்ளூர் சட்டத்தரணிகள் சர்வதேச தரத்திலான இந்தச் சட்டங்கள் குறித்துப் போதிய அறிவு பெற்றிருக்கவேண்டும் என்பதற்காகவே, முல்லைத்தீவு உள்ளிட்ட வடமாகாணத்தின் அனைத்துச் சட்டத்தரணிகள் சங்கங்களையும் ஒன்றிணைத்து இந்த மாநாட்டை நடத்தினோம்.

**கேள்வி:** தொழில்நுட்பம் சார்ந்த சட்ட அறிவு சாதாரண குடிமக்களுக்கு ஏன் இந்தக் காலத்தில் அவசியமாகிறது?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** இன்று தொழில்நுட்பம் எல்லா இடங்களிலும் பரவியுள்ளது. ஆனால், கிராமப்புற மக்களுக்குத் தங்களது கையடக்கத் தொலைபேசிகளையும் மின்னணு சாதனங்களையும் சட்ட ரீதியாக எவ்வாறு பாதுகாப்பாகக் கையாள்வது என்பது தெரியவில்லை. ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால் எங்கு செல்வது என்ற புரிதலும் இல்லை. எனவே, சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸாருக்கு மட்டுமன்றி, பொதுமக்களுக்கும் இந்தச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை வழங்க வேண்டியது அவசியமானது.

**கேள்வி:** நீதிமன்றக் கட்டமைப்பில் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் புகுத்த முடியுமா?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** நிச்சயமாக! மலேசியா மற்றும் சீனாவில் 'இன்டர்நெட் நீதிமன்றங்கள்' ஏற்கனவே வெற்றிகரமாக இயங்குகின்றன. போக்குவரத்து விதிமீறல்கள், வங்கி நிலுவைகள் போன்ற 'சட்ட ரீதியான குற்றங்களை' விசாரிக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தலாம். ஒரு நபர் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நிலையில், அதனை ஒரு ரோபோ கூடத் தீர்க்கமுடியும்.



இதன்மூலம் நீதித்துறைக்குச் செலவாகும் அதிகப்படியான நேரம் மற்றும் பணம் மிச்சப்படுத்தப்பட்டு, மக்களுக்கான நீதி விரைவுபடுத்தப்படும்.

**கேள்வி:** நீங்கள் 'ஏசி குரூப்' (AC Group) என்ற அமைப்பின் ஊடாக விவசாயத்துறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்த முனைவதாகத் தெரிகிறதே?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** ஆம், எங்களது ஏசி குரூப் நிறுவனம் விவசாயம், சுற்றுலா மற்றும் ஏற்றுமதி ஆகிய துறைகளில் கவனம் செலுத்துகிறது. இலங்கையின் பாரம்பரிய விவசாய முறையை 'ஸ்மார்ட் விவசாயமாக' மாற்றுவதே எமது இலக்கு.

தற்போது எம்மிடம் 1000 ஏக்கருக்கும் அதிகமான நெல் வயல்கள் உள்ளன. 'அஸ்வன்ன' (அறுவடை) என்ற திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு இலவச விதைகளை வழங்கி, அவர்களின் அறுவடையை நாங்களே நியாயமான விலைக்குக் கொள்வனவு செய்கிறோம்.

ட்ரோன் தொழில்நுட்பம் போன்ற நவீன வசதிகளைப் புகுத்தி, வீணாவதைத் தவிர்த்து உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் முதற்கட்டமாக வடமாகாணத்தில் ஒரு பாரிய நெற்களஞ்சிய ஆலையைத் தொடங்கவும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு இதில் வேலைவாய்ப்புகளை வழங்கவும் ஆலோசித்து வருகிறோம்.

**கேள்வி:** இந்த மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச மற்றும் உள்நாட்டு நிபுணர்கள் பற்றி...?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** சர்வதேச அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள சென்னையிலிருந்து புகழ்பெற்ற சட்டத்தரணி ஆர். பிரபாகரன் இணையவழியில் இணைந்தார். உள்நாட்டில், சட்ட அமலாக்கத் துறையில் நிபுணத்துவம் பெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தில்ருக் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பான அமர்வுகளை நடத்தினர். நீதிமன்றங்களின் முன் 'மின்னணு ஆதாரங்களை' எவ்வாறு சமர்ப்பிப்பது என்பது குறித்த நுட்பங்களை இதன் மூலம் எமது சட்டத்தரணிகள் பெற்றுக்கொண்டனர்.

**கேள்வி:** சட்டம் இயற்றுபவர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?

**கலாநிதி சுனில் அபேரத்ன:** தற்போதைய சட்டங்களை நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்பவும், சர்வதேச தரத்திற்கு இணையாகவும் மாற்றியமைக்க வேண்டும் என்ற செய்தியை நாம் சட்டம் இயற்றுபவர்களுக்கு வழங்கியுள்ளோம். டிஜிற்றல் யுகத்தில் இலங்கையை ஒரு பலமான நாடாக முன்னகர்த்த வலுவான சட்டக்கட்டமைப்பு ஒன்றே அச்சாணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செயற்கை நுண்ணறிவும் சமுதாயமும்

கடந்த வாரத்தின் தொடர்ச்சி....


## தரவை அடுக்குதல் முதல் ஆழக்கற்றல் வரை

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன்

கலாநிதி மகேந்திரராஜா பிரவீணன், அடிலெய்டு பல்கலைக்கழகத்தில் கணினி அமைப்பியல் பொறியியல் துறையில் பட்டப்படிப்பை முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார். அதன் பின்னர், மென்பொருள் பொறியியலாளராக தொழிற்றுறையில் குறுகிய காலம் பணியாற்றிய அவர், 2010ஆம் ஆண்டு சிட்னி பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பப் பள்ளியில் சிக்கலான வலையமைப்பு பகுப்பாய்வுத் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். கணிப்பொறி தொற்று நோயியல் ஆராய்ச்சிக் கல்வியாளரான பிரவீணன் தற்போது சிட்னி பல்கலைக்கழகத்தில் கணினிப் பொறியியல் துறையின் இணைப் பேராசிரியராகக் கடமையாற்றுகின்றார்.


சுவர்ப்பு அல்கோரிதம்கள் (evolutionary algorithms) மற்றும் fitness functions மூலம், மேலும் வலுவான பழுதுபார்க்கும் வழிமுறைகள் உருவாகச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதன்மூலம், பழுதுபார்த்தல் என்பது வெறும் பொறியியற் செயல்முறை அல்ல; மாறாக, தகவல், தொடர்பாடல், மற்றும் உள்ளூர் முடிவெடுப்புகளிலிருந்து உருவாகும் ஒரு emergent process என்று கருதப்படுகிறது. பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவுக் கருத்துகள் விண்வெளி அமைப்புகளுக்குள் மட்டும் வரையறுக்கப்படுவதில்லை. உதாரணமாக, Ace Mod influenza simulation போன்ற புத்தினி அடிப்படையிலான நோய்ப் பரவலியல் வடிவமைப்புகளில் (agent=based epidemic models), மில்லியன் கணக்கான மென்பொருள் புத்தினிகள் (software agents) குடும்பங்கள், பள்ளிகள், வேலைத்தளங்கள், மற்றும் சமூகத் தொடர்புகள் வழியாக ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்கின்றன. இவ்வாறு உள்ளூர் அளவிலான தொடர்புகளிலிருந்து பெரிய அளவிலான தொற்றுநோய்க் கோலங்கள் (epidemic patterns) உருவாகின்றன. இது AAV செயற்றிட்டத்தின் பிரதான செயன்முறையை வேறொரு துறையில் அதாவது நோய்ப்பரவலியல் வடிவமைப்பில் பாவிப்பதே ஆகும். இங்கும் மிகப் பெரிய மற்றும் சிக்கலான மொத்த நடத்தைகள், பல சிறிய உள்ளூர்த் தொடர்புகளிலிருந்து உருவாகலாம்.

SA early vision



Swarm robots in a loop with embedded SHMM networks

High-level design: sensor & communication network




- distributed processing units
- locally connected
- embedded sensors
- variable sensor density
- easily replaceable cells

M. Prokopenko, P. Wang, D.C. Price, P. Valencia, M. Foreman, A.J. Farmer. Self-organizing hierarchies in sensor and communication networks, *Artificial Life*, 11(4), 407-426, 2005.

M. Prokopenko, P. Wang, M. Foreman, P. Valencia, D.C. Price, G.T. Poulton. On connectivity of reconfigurable impact networks in Ageless Aerospace Vehicles, *Journal of Robotics and Autonomous Systems*, 53(1), 36-58, 2005.

மொத்தத்தில், பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு என்பது சேதமடையாத் திறன் (robustness), பெருக்கமடைதிறன் (scalability), மாற்றக்கூடும் தன்மை (flexibility), தொடர் அவதானிப்பு (continuous monitoring), selforganization, மற்றும் சுய பழுதுபார்த்தல் போன்ற பல நல்ல அம்சங்களை உடையது. ஆனால் அதேசமயம், privacy, surveillance, adversarial attacks, தரவு நஞ்சாக்கப்படல் (data poisoning), பொறுப்புக்கூறல் (accountability), வெளிப்படைத்தன்மை, மற்றும் computational infrastructureஇன் சுற்றுச்சூழல் தாக்கம் போன்ற பல நெறிமுறை மற்றும் சமூகச் சிக்கல்களையும் எழுப்புகிறது. ஆகவே, encryption, federated learning, விளங்கப்படுத்தக்கூடிய செயற்கை நுண்ணறிவு (explainable AI), auditing frameworks, மற்றும் பொறுப்புணர்வுடைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாட்டின் வழிமுறைகள் போன்ற பாதுகாப்பு அணுகுமுறைகள் மிகவும் அவசியமாகின்றன. பரவலாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு அமைப்புகளின் மிகப் பெரிய வலிமை, நுண்ணறிவு முழு அமைப்பிலும் பரவியிருப்பதில்தான் உள்ளது; அதேபோல், பாதுகாப்பும் பொறுப்பும் முழு அமைப்பிலும் பரவியிருக்க வேண்டியதும் அவசியமாகவே உள்ளது.

# ஈழவிடுதலைப்...



(முதலாம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடுத்த பாடல்....
"நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் நாட்டின் அடிமைவிலங்கு தெறிக்கும்..."

இன்னொன்று....
"பொறிகக்கும் விழியோடு புறப்பட்டு விட்டோம் போராட நாள் குறித்தோம், எரிகுண்டு பாய்ந்தாலும் இரு கை கொண்டேற்போம் எதற்கும் நாம் துணிந்து விட்டோம்" என்றொலிக்கும்.

இதை மிஞ்சுவதாக

"நெருப்பில் நீராடுவோம் - நாங்கள் நிமிர்ந்து போராடுவோம்....
பகைவர் நேரில் நின்று போரில் வென்று வாகை சூடுவோம்..."

இப்படியே நூறு நூறு பாடல்கள்...

தொடக்கத்தில் திராவிட இயக்கப்பாடல்கள், பின்னர் ஆதித்தனாரின் தமிழ்த் தேசிய இயக்கப்பாடல்கள் என்று பாடி வந்த தேனிசை செல்லப்பா, பின்னாளில் விடுதலைப்புலிகளின் போராட்டப்பாடல்களை அதிகமாகப் பாடி, தமிழீழ எழுச்சிப்பாடகராக விளங்கினார். செல்லப்பாவின் பாடல்கள் ஈழத்தில் தெருக்கள் தோறும், வீடுகள் தோறும் இசைக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. போராட்டகாலத்தில் மாவீரர் நாள், கரும்புலிகள் நாள், தியாகி திலீபனின் நாள் போன்ற எழுச்சி நாள்களில் சிவப்பு மஞ்சள் கொடிகள் பட்டொளி வீசப்பறக்கும். மின்கம்பங்களில் எல்லாம் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு எழுச்சிக்கானங்கள் இசைக்கவிடப்பட்டிருக்கும். அதில் அநேக எழுச்சிப்பாடல்கள் தேனிசை செல்லப்பாவின் பாடல்களாகத்தான் இருக்கும்.

தாயக இளைஞர்களுக்கு எழுச்சியூட்டுவதிலும், அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதிலும் அவர்களது இலட்சியங்களுக்கு வலுவேற்றுவதிலும் தேனிசை செல்லப்பா தன் குரலால் அளப்பரிய பங்களிப்பினை வழங்கினார்.

தமிழ்நாட்டிலும், ஈழத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இவர் நூற்றுக்கணக்கான இசைநிகழ்ச்சிகளை நடத்தினார். 1990 இல் யாழ்ப்பாணம் முற்றவெளியில் விடுதலைப்புலிகளால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவில் இவரது இசை நிகழ்ச்சியை ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்து கண்டு களித்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் தோறும் இசைநிகழ்ச்சிகளை நடத்தினார்.

"மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்பத் தடையில்லை
நாங்க மட்டும் உலகத்திலே நாடு திரும்ப முடியல்ல..." என்று தமிழ்நாட்டில் அகதிகளாகத் தங்கியிருப்பவர்கள் நாடு திரும்பமுடியாத அவலத்தை காசி ஆனந்தனின் வரிகளிலும்

"வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகிறேன்
வயல்வெளிகள் மீது கேட்குமா இல்லை
வல்லைவெளி தாண்டிப் போகுமா..." என்று இந்திய இராணுவ நடவடிக்கையின் போது வன்னிக் காடுகளுக்குள் கரந்துறைந்திருந்த புலிகளின் உணர்வினை புதுவை இரத்தினதுரையின் வரிகளிலும் தேனிசை செல்லப்பா[illegible] மட்டுமல்ல, "தமிழா நீ பேசுவது தமிழா" என்று தமிழை விடுத்து அரை குறை ஆங்கில மொழியில் பேசுவோரைக் கிண்டலடித்துப் பாடினார். இப்படிப் பலவிதமாக, பலதையும் பாடி நம் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பிடித்த தேனிசை செல்லப்பாவுக்குத் தலைவர் பிரபாகரன் ஈழத்தில் வைத்து பெருமதிப்பளிப்பைச் செய்தார். அதற்கிணையாக செல்லப்பாவின் பாடல்களைக் கேட்கும் தமிழ் மக்கள் தங்கள் மனதில் அவருக்கு நீங்காத இடத்தை அளித்து மதிப்புச் செய்துள்ளனர். இவ்வாறு தமிழ் இனமான உணர்வுப் பாடல்களாலும், விடுதலை எழுச்சிப் பாடல்களாலும் தமிழர்களின் நாடி நரம்புகளில் உணர்வூட்டிய பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா தனது 85ஆவது வயதில் சென்னையில் காலமானார். அவர் காலந் தந்த பாணர்தான். தோற்கடிக்கப்பட்ட கனவின் மிச்சமாய் இன்னும் இருக்கும் சில நினைவுகளில் தேனிசை செல்லப்பாவின் பாடல்களும் ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பச்சிலைப்பள்ளி மண்ணில் கூத்துக்கலைக்குக் கிடைத்த புது இரத்தம்:



கலாபூசணம் எஸ். புத்திசிகாமணி

பச்சிலைப்பள்ளி மண்ணின் வரலாற்றில் ஒரு கலைப்புரட்சி நிகழ்ந்திருக்கிறது. கடந்த 2026.05.08 அன்று, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும் பிரதேச கலைஞர்களும் ஒன்றிணைந்து நடத்திய 'இசைநாடகக் கூத்துப் பெருவிழா' பளை விளையாட்டு மைதானத்தை ஒரு கலைக்கூடமாக மாற்றியிருந்தது.

**ஊர்வலமாக வந்த கலைத் திருவிழா**

வழமையான சம்பிரதாயமான தொடக்கங்களுக்கு அப்பாற்பட்டு, வட மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் மற்றும் கௌரவ விருந்தினர்கள் பளை பேருந்து நிலையத்திலிருந்து நடைபவனியாக அழைத்து வரப்பட்டனர். இரட்டைக்கேணி அம்மன் ஆலயம் வரை மேளதாளங்கள் முழங்க நடந்த அந்தப் பவனி, பச்சிலைப்பள்ளி மக்கள் இதுவரை கண்டிராத ஒரு கலை எழுச்சியாகப் பேசப்பட்டது.

**அரங்கை அதிரவைத்த வரவேற்பு**

மதகுருமார்களின் ஆசியுரையோடு தொடங்கிய விழாவில், இரு நடனக்குழுவினரால் பயிற்றுவிக்கப்பட்ட வரவேற்பு நடனம் பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக அமைந்தது. தொடர்ந்து, கலைஞரும் நடிகருமான திரவியரத்தினம் தனது கம்பீரமான குரலில் வரவேற்புரையை வழங்கி விழாவைத் தொடங்கி வைத்தார்.

**சாதனைப் பதிவுகளும் கௌரவிப்பும்**

பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான இ. த. ஜெயசீலன் தலைமையுரை ஆற்றும்போது, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் கடந்த இரண்டு வருடங்களாகக் கலைப்போட்டிகளில் முதலிடம் பெற்ற சாதனையைப் பகிர்ந்துகொண்டார். மக்களின் பலத்த கரகோசங்களுக்கு மத்தியில், கலைப்பணியாற்றும் அண்ணாவிமார்கள் மற்றும் முதிய கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

**உயிர்பெற்ற மேடை: பாரம்பரியக் கூத்துக்கள்**

விழாவின் உச்சகட்டமாக பின்வரும் நான்கு உன்னத நாடகங்கள் அரங்கேறின:

- சத்தியவான் சாவித்திரி (இசைநாடகம்)
- காத்தவராயன் (சிந்து நடைகூத்து)
- ஞானசவுந்தரி (நாட்டுக் கூத்து)
- அரிச்சந்திர மயான காண்டம் (இசைநாடகம்)

## ஒரு நன்முயற்சியின் நன்றி நினைவு

இந்தக் கூத்துகளில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் பங்கேற்றமை தான் இவ்விழாவின் மிகப்பெரிய வெற்றி. நவீன மோகத்தில் மறைந்து வரும் நம் பாரம்பரியக் கலைகளை, அடுத்த தலைமுறை கைகளில் எடுத்துள்ளதை ஆளுநர் மற்றும் பிரதேச செயலர் ஆகியோர் நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டனர்.

**வரலாற்றுப் பின்புலமும் பழைய நினைவுகளும்**

பச்சிலைப்பள்ளியின் கலைவேர்கள் ஆழமானவை. போர்த்துக்கேயர் காலத்திலேயே 'ஆசுகவி' க. வேலுப்பிள்ளையின் குறிப்புகளில் சினாலியில் கூத்து கள் இடம்பெற்றதாகத் தரவுகள் உள்ளன. 1950களில் 'நாட்டுக்கூத்தின் தந்தை' பாசையூர் பூந்தான் யோசேப்பு மற்றும் அண்ணாவியார் இளையப்பா ஆகியோரின் வடமோடி, தென்மோடி ஆட்டங் களைச் சிறுவயதில் நான் இரசித்த நினைவுகள் இன்றும் பசுமையாக உள்ளன. இயக்கச்சி, மண்டளாய், முகாவில் என பச்சிலைப்பள்ளியின் ஒவ்வொரு வீதியிலும் ஒரு காலத்தில் இசைநாடகங்கள் முழங்கின. அந்த வசந்தகாலம் மீண்டும் திரும்பியிருப்பதை இந்தப் பெருவிழா உறுதி செய்தது.


**கலைக்குச் செழுமை சேர்த்த ஆளுமைகள்**

முல்லையடிக் கிராமத்தின் 'சீன்' செல்லையா மற்றும் ஆழியவளை மத்தளம் கதிர்வேலு போன்ற கலைஞர்களை நாம் நன்றியுடன் நினைவுகூரவேண்டும். அவர்களின் கலைத் தொடர்ச்சியை இன்று செல்லையாவின் மகன் தனபாலசிங்கம் ஒப்பனை மற்றும் நடிப்பின் ஊடாகத் தாங்கிப் பிடித்து வருகிறார்.

**பாராட்டுக்குரிய பண்புடைச் செம்மல்**

அருகிவரும் இந்தக் கலைகளுக்குப் புத்துயிர் ஊட்டி, சிறந்த நிர்வாகியாக மட்டுமல்லாமல் ஒரு சிறந்த கவிஞராகவும், ஆய்வாளராகவும் திகழும் 'பண்புடைச் செம்மல்' இ. த. ஜெயசீலன் அவர்களை இத்தருணத்தில் நன்றியுடன் வாழ்த்துகிறேன். அவருடன் தோள் நின்ற கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களின் கூட்டுழைப்பே இந்த வெற்றியின் இரகசியம்.


இந்த நன்முயற்சி வெறும் விழாவோடு நின்றுவிடாமல், பச்சிலைப்பள்ளி மண்ணின் கலைத்தாகத்தைத் தீர்க்கும் ஒரு தொடக்கப்புள்ளியாக அமையும் என்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 20 . 12 . 1956
மறைவு 05 . 05 . 2026

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கு பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கடந்த 05.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பரராஜசிங்கம் பிரபாகரன்
**(ஓய்வுபெற்ற தபாலதிபர்)**


அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (03.06.2026) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பரராசசேகர பிள்ளையார் கோவிலடி,
இணுவில் தெற்கு, இணுவில்.

குடும்பத்தினர்
077 695 1958

(CS/61568) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 04 . 1944
மறைவு 31 . 05 . 2026

### சின்னப்பா கனகநாயகம்

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், செருக்கப்புலம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பா கனகநாயகம் அவர்கள் கடந்த (31.05.2026) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற கந்தையா, பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தாட்சாயினி (ஆசிரியை - மன்/ எருக்கலம்பிட்டி மத்திய மகாவித்தியாலயம்), லாவன்யா (கனடா), பார்த்தீபன் (இலங்கை மின்சாரசபை - சுன்னாகம்), அச்சுதன் (ஆசிரியர் - மன்/ இலுப்பைக்கடவை தமிழ் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், முகுந்தன் (ஆசிரியர் - வளவாளர் மடு வலயக்கல்வி அலுவலகம் மன்னார்), சந்திரகாந்தன் (கனடா), அபிராமி, சசிகலா (மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் - அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கனகபூசனம் மற்றும் பேரின்பநாயகம், ஞானதேவி, ராஜேஸ்வரி, கருணாநிதி (நிதி), கருணாகரன், சறோஜாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், நர்த்தனா, பிரித்தி, கோகுல், கோபிதன், பிரணிகா, லவனிகா, பிரியந், அக்சிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.06.2026) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு அவரது இல்லத்தில் (செருக்கபுலம், தெல்லிப்பழை) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்பிளவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS/61568) J-1 **தகவல் : குடும்பத்தினர்**

## லிட்ரோ எரிவாயு நாளையதினம் விலைத்திருத்தம்

கொழும்பு, ஜூன் 3

லிட்ரோ சமையல் எரிவாயுவின் ஜூன் மாதத்துக்கான விலைத் திருத்தம் குறித்த அறிவிப்பு, நாளை வெளியிடப்படும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மாதாந்த எரிவாயு விலை திருத்தத்திற்குத் தேவையான அறிக்கைகள் தற்போது நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதன் இறுதி அறிக்கை நாளை கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் லிட்ரோ நிறுவனம் மேலும் கூறியுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 20 . 11 . 1944
மறைவு 01 . 06 . 2026

### ஆறுமுகம் இரகுநாதன்
**(வர்த்தகரும், பாரஊர்தி உரிமையாளரும்)**

இல. 206, நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரகுநாதன் அவர்கள் கடந்த (01.06.2026) திங்கட்கிழமை மாலை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், பவானி, கமலநாதன் (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), றோகினி, ஜெயந்தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கராணி, சத்தியாநந்தன் ஆகியோரின் சகோதரரும், சுப்பிரமணியம், சுந்தரேஸ்வரி (ஜேர்மனி), சத்தியநாதன் (ஜேர்மனி), ஸ்ரீபாலன் (ஆசிரியர் - யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), சிவலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகா, நிஷாந்தன், சுஜிந்தன் (ஆசிரியர்), கபிலன், கபிஷன், கபிஷா, பிரவீன், லக்கியன், விஸ்னுயன், சிவானுஜன், வினுஜன், ஜெனுயன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அக்ஷயன், அத்விக், இசை ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (03.06.2026) புதன்கிழமை காலை 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர், பிள்ளைகள்**
**இல. 206, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 6209, 077 711 0163,**
**077 387 9414**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த (14.06.2025) சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

### கயிலாயபிள்ளை நாகபூரணம்

தோற்றம் 16.07.1948
மறைவு 14.06.2025



**அவர்களின் முதலாம் ஆண்டு**
**ஆத்மசாந்திப் பிரார்த்தனை**
**இன்று (03.06.2026) புதன்கிழமை**
**அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.**


அன்பின் இலக்கணமாய்
என் அம்மா !
பாசத்தின் உறைவிடமாய்
என் அம்மா !
பண்பின் சிகரமாய்
என் அம்மா !
பத்தினி தெய்வமாய்
என் அம்மா !
நான் வாழ தம் வாழ்வை
அர்ப்பணித்த தெய்வமே
தாமின்றி தனியாக
என் செய்வேன்
என் அன்னையே
உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 06 . 1972

இறப்பு 02 . 06 . 2026

### கனகரத்தினம் பாலச்சந்திரன்

(லச்சம்)

சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் பாலச்சந்திரன் 02.06.2026 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - சாந்தமலர் தம்பதியரின் மருமகனும், சேனுஜா, விதுர்சியா, தர்விந் ஆகியோரின் அன்புத் தந்தையும், வர்மன், சாருஜன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற கந்தையாவின் சகோதரனும், செல்வரத்தினம், மல்லிகாதேவி, கேதீஸ்வரன், இராசரத்தினம், புலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரியின் மைத்துனரும், சரோஜினிதேவி, ஜெயராணி, சுசிலாதேவி, வைதேகி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 03.06.2026 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுழிபுரம் கிழக்கு,
பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 9472 921
076 040 8748

(CS 31922)A

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 25 . 07 . 1945

இறைவன் அடியில் 28 . 05 . 2026

### சிவகாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

திதி: தேய்பிறை திருதியை

ஐந்து ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் மறையவில்லை...
எங்கள் இதயங்களில் என்றும்
நீங்கள் வாழ்ந்துகொண்டே இருக்கிறீர்கள்.
அன்பும் பாசமும் தந்த உங்கள் முகம்
இன்றும் கண்முன்னே நிற்கிறது...
நீங்கள் இல்லாத வெற்றிடத்தை
யாராலும் நிரப்ப முடியவில்லை.
காலம் சென்றாலும் காயம் ஆறவில்லை...
உங்கள் நினைவுகள் மட்டும்
என்றும் நிலைத்திருக்கின்றன.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கிறோம்

புலோலி மேற்கு,
பருத்தித்துறை

மகள்
றஞ்சனாமதி
அஞ்சனகுமார்

(CS/61576) J-1

## நெல் உலரவிடும் தளத்துக்கு அடிக்கல்



கிளிநொச்சி,ஜூன் 3

ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைத்திட்டம் ஊடான, பன்முக வறுமையை ஒழிப்பதற்கான, கிராமிய அபிவிருத்தித் திட்டம், கிளிநொச்சி கணேசபுரம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் போது நெல் உலரவிடும் தளம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், திட்ட உத்தியோத்தர், கிராம அலுவலர், பொது அமைப்புகளின்பிரதிநிதி கள் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டனர். (க-113)

**Sponsorship உடன் Visit Visa!**

**UK | Canada | Australia | Europe**

1. குடும்பத்தினரை சந்திக்க
2. சுற்றுலா பயணம் மேற்கொள்ள
3. நண்பர்களை சந்திக்க

அனுபவமிக்க ஆலோசனையுடன் உங்கள் விண்ணப்பத்தை இன்றே ஆரம்பியுங்கள்!

அழையுங்கள்: 076 817 5692, 074 2764353, 070 6919360

GLOBAL Immigateway, Visa Consultants

**Office Executive (அலுவலக நிர்வாகி) தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள விசா ஆலோசனை நிறுவனத்திற்கு Office Executive தேவை.

தகைமைகள்:

1. தமிழ் மற்றும் ஆங்கில அறிவு
2. கணினி அறிவு
3. வாடிக்கையாளர் கையாளுதல் (Customer Handling) அனுபவம் இருப்பின் முன்னுரிமை

CV அனுப்ப: jobs@immigateway.com

தொலைபேசி: 076 8175692, 074 276 4353

## பதவி வெற்றிடம்

(விண்ணப்பங்கள் வெளிவாரியாக கோரப்படுகின்றது)

மடு ப.நோ.கூ.சங்கத்தில் கீழ் குறிப்பிட்ட பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களுக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாக வதிபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பொது முகாமையாளர் - குறியீட்டு இலக்கம் 101/ 08
   1. சம்பள அளவுத்திட்டம் :-
      101/08 35665.00 - 670*10 - 730*10 - 890*10 - 58565.00
      (அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)
   2. தகைமைகள் :-

- பொது முகாமையாளர் :

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச் சமமான தகைமை இத் தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளி விபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./ இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்/ க.பொ.த உயர் தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

02. கிராமிய வங்கி முகாமையாளர் - குறியீட்டு இலக்கம் 205/13
   1. சம்பள அளவுத்திட்டம் :-
      205/13 33360.00 - 520*10 - 580*10 -740*10 - 51760.00
      (அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)
   2. தகைமை :-

- கிராமியவங்கி முகாமையாளர் :-

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் கிராமிய வங்கிப் பிரவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் நிதிச்செயற்பாட்டுடன் தொடர்புடைய நிறுவனத்தில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்

- வயது :- 18 -40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
  சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
- பொது :- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி ரொக்கப் பிணையாக சம்பளத்தின் 5 மடங்கு செலுத்த வேண்டும்.
  சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் பிரதியுடன் தலைவர்/ பொதுமுகாமையாளர். மடு பல நோக்கு கூட்டுறவுசங்கம். பெரியபண்டிவிரிச்சான். மடு என்னும் விலாசத்திற்கு எதிர்வரும் 24.06.2026ம் திகதிக்கு முன்னர் அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
மடு ப.நோ.கூ.சங்கம்,
பெரியபண்டிவிரிச்சான், மடு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

## நிகழ்நிலைச்...

2011ஆம் ஆண்டு மனித உரிமைகள் தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டத்தை ஒழுங்கமைத்த லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்கால் பகுதியில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதையடுத்து கடந்த 2012ஆம் ஆண்டு லலித், குகன் ஆகியோரின் உறவுகளால் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. இதன் தொடர்ச்சியாக கடந்த 2017ஆம் ஆண்டு மனுவின் சாட்சியாளர்கள் பட்டியலில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவின் பெயர் இணைக்கப்பட்டது.

எனினும், பாதுகாப்புக் காரணங்களால் தன்னால் யாழ்ப்பாணம் வரமுடியாது என்று கோத்தாபய ராஜபக்ச தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தார். நிகழ்நிலையில் சாட்சியம் வழங்க அனுமதிக்குமாறும் அவர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார். கோத்தாபயவின் கோரிக்கை தொடர்பான கட்டளை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று வழங்கப்பட்டது. இதன்படி, கோத்தாபயவின் சாட்சியத்தை நிகழ்நிலையில் பதிவு செய்யுமாறு நீதிமன்றம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

சட்டத்தின் வளர்ச்சி, இலத்திரனியல் பரிணாம வளர்ச்சி ஆகிய விடயங்களைக் கருத்திற்கொண்டு, சாட்சியின் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின்படி கோத்தாபயவிடம் நிகழ்நிலையில் சாட்சியத்தைப் பதிவுசெய்யுமாறு நீதவான் எஸ். லெனின்குமார் தனது கட்டளையில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-ம-26)

## செம்மணிப்...

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 14 ஆம் நாள் நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன. இதன்போதே, 8 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 5 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. இதன்படி, செம்மணிப் புதைகுழிக்குள் இருந்து இதுவரை 270 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 266 என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

புதைகுழியில் பல்வேறு பகுதிகளில் என்புக் குவியல்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றை மீட்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அத்துடன் சில இடங்களில் இணைந்த நிலையில் என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

254ஆவதாக அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதியின் கழுத்துப் பகுதியில் இருந்து செம்பொன்னாலான சான்றுப் பொருளொன்று மீட்கப்பட்டுள்ளது. அது நீதிமன்றத்தின் கட்டுக்காவலின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிபதி எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக் கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார், சட்டத் தரணி நிரஞ்சன் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றுள்ளனர்.

(அ-ம-26)

## தவிசாளருக்கு...

தொடர்ந்து, இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகரசபைத் தவிசாளருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்திருந்தார். இந்த நடவடிக்கைக்கு எதிராக தவிளாளரால் வடமாகாண மேல் நீதிமன்றத்தில் எழுத்தாணை முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போது தவிசாளருக்கு எதிராக விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெறுவதாக ஆளுநர் தரப்புத் தெரிவித்திருந்தது. இதையடுத்து, இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

மன்னார் நகரசபைத் தவிசாளரால் வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி அரியநாயகம் ஆகியோருக்கு எதிராக இந்த எழுத்தாணை முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. முன்னதாக, இந்த வழக்கை ஆராய்ந்த வடமாகாண மேல் நீதிமன்றத்தின் (யாழ்ப்பாண அமர்வு) முன்னாள் நீதிபதி அலெக்ஸ் ராஜா, மன்னார் நகரசபை தவிசாளருக்கு எதிராகத் தொடர்ந்து விசாரணை நடத்துவதற்கு இடைக்காலத் தடைக்கட்டளை விதித்து உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மன்னார் நகரசபை தவிசாளரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் முன்னிலையாகியிருந்தார். (அ-ம-26)

## செம்மணிப் புதைகுழி...

தார். செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இரண்டாம் பகுதி நடவடிக்கையில் ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் பங்குபற்றி வருகின்றனர். இதையடுத்தே அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவரும் பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

(அ-ம-26)

## மேயர்...

வவுனியா மாநகரசபையின் பிரதி மேயர் ப.கார்த்தீபன் அந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டமை தவறு என்று தெரிவித்து தேசிய மக்கள் சக்தியால் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனுவைப் பரிசீலனைக்கு எடுத்த நீதிமன்றம் வவுனியா மாநகரசபை இயங்குவதற்கும் மேயர் எஸ்.காண்டீபன் மற்றும் பிரதி மேயர் பரமேஸ்வரன் கார்த்தீபன் ஆகியோர் அந்தப் பதவிகளில் செயற்படுவதற்கும் தடைவிதித்து இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருந்தது. அதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு தொடர்பில் நேற்று விசாரணைகள் இடம்பெற்றன. வவுனியா மாநகரசபை மற்றும் மேயர் சார்பில் சட்டத்தரணி பெனிஸ்லஸ் துஷானின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதங்களை முன்வைத்தார். பிரதி மேயரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் முன்னிலையாகி வாதிட்டார்.

அனைத்து விவாதங்களையும் கவனத்தில் எடுத்த உயர்நீதிமன்றம், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு சபையை நீண்ட காலம் முடக்க அனுமதிக்க முடியாது என்று குறிப்பிட்டு, சபை தொடர்ந்து இயங்கவும், மேயர் தமது பதவியில் தொடரவும் உத்தரவிட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையையும் உயர்நீதிமன்றம் விலக்கியது. எனினும் பிரதி மேயருக்கு எதிரான இடைக்காலத் தடை தொடரும் என்றும் உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது. ஆயினும் அவர் தாமாகப் பதவி துறந்தால் அந்தப் பதவி விலகலை ஏற்றுக் கொள்ளுமாறும் மாநகரசபையின் செயலாளருக்கு உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது. (அ-ம-110-26)

## முதலமைச்சர்...

பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து, வடமேல் மாகாணசபைக்கான முதல்வர் வேட்பாளராக போட்டியிடும் எண்ணம் உள்ளதா என ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணசபை ஊடாக கிராமிய மக்களுக்கு சேவை செய்வதற்குரிய வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே, முதல்வராக அப்பணியை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு இருந்தால் அது நல்லது. நான் முதல்வராக பதவி வகித்துள்ளேன். தற்போது தேசிய அரசியலில் உள்ளேன். எனவே, உரிய வகையில் ஆராய்ந்தே முடிவுகளை எடுக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்தால், பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் போட்டியிடலாம் - என்றார். (அ-ம-இ)

## நம்பிக்கை...

திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்கு நம்பிக்கை பொறுப்பு நிதியமொன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. எனினும், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த யாழ்ப்பாணம் மாநகரசபை அந்த நிதியத்தைத் தமது பொறுப்பில் வழங்குமாறு வலியுறுத்தி வருகின்றது. இந்த விடயம் தொடர்பில் யாழ். மாநகரசபையில் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் முதல்வர் மதிவதனியுடன் கலந்துரையாடல் நடத்திய தூதுவர் சந்தோஷ் ஜா, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை நம்பிக்கை நிதியத்திடம் ஒப்படைக்க இணங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறு இணங்கினால், அடுத்த இரண்டு வருடங்களில் அந்த மையம் மீண்டும் யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தூதுவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ள சபை அமர்வில் நல்ல முடிவாக எடுக்குமாறு அவர் மேயரை அறிவுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள நம்பிக்கை நிதியத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களே அதிகளவில் உள்ளனர். அத்துடன், திசைகாட்டி அரசாங்கம் அண்மைக் காலமாக இந்தியாவுடன் நெருக்கம் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம-26)

## சந்தோஷ் ஜா...

உதவித் திட்டங்களை வழங்கினார். யாழ்ப்பாணம் - கீரிமலை வரலாற்றுச் சிறப்புமிக்க நகுலேஸ்வரர் ஆலய வளாகத்தில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் நீர் சுத்திகரிப்பு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதைப் பொது மக்களின் பயன்பாட்டுக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் தூதுவர் சந்தோஷ் ஜா கலந்துகொண்டார். அத்துடன், யாழ்ப்பாணம் பொது நூலகம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற நிகழ்வுகளிலும் அவர் பங்கெடுத்தார். (அ-ம-26)

## வலிந்து...

கான வெகுஜன அமைப்பு ஆகியன இணைந்து யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டத்தையும் பேரணியையும் நடத்தின.

யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் ஆரம்பமான பேரணி காங்கேசன்துறை வீதி ஊடாக யாழ்ப்பாணம் சத்திரச் சந்தியை அடைந்து பின்னர் ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்தை அடைந்து, அதன் ஊடாக தந்தை செல்வாக கலையரங்கத்தை அடைந்தது. தொடர்ந்து அங்கு 'முள்ளிவாய்க்காலுடன் வரலாறு முடிந்ததா?' எனும் தலைப்பிலான கருத்தரங்கும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் காணாமல் ஆக்கப்பட்ட லலித்குமாரின் தந்தையார் வீரராஜ், அருட்தந்தை ஜீவந்த பீரிஸ், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சம உரிமை இயக்கம், சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு ஆகியவற்றின் நிர்வாகிகள், செயற்பாட்டாளர்கள், மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள், தென்னிலங்கை மற்றும் யாழ்.மாவட்டத்தின் சிவில், சமூகச் செயற்பாட்டாளர்கள் என 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(அ-ம-26-20-66)

## தாயகப்...

செய்யப்பட்டுள்ளார். இசைக்கச்சேரி ஒன்றில் தான்பாடிய பாடலையும், சில காலங்களுக்கு முன்னர் பாடப்பட்ட பாடலையும் எடிட் செய்து பதிவிட்டவரே இவ்வாறு கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் தற்போது மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்

# தமிழ், சிங்கள மாணவர்களின் ஒற்றுமையைச் சிதைக்கச் சதி

## வெசாக் கூடு விவகாரம் தொடர்பில் பீடாதிபதி கெங்காதரன் அறிக்கை



யாழ்ப்பாணம், ஜூன் 3

**யாழ். பல்கலைக் கழகத்தில் தமிழ், சிங்கள மாணவர்களிடையே காணப்படும் நெருக்கத்தையும், புரிந்துணர்வையும் சீர்குலைக்கும் வகையில் வெளிப்புறச் சக்திகளால்தான் வெசாக் கூடு சேதப்படுத்தப்பட்டது இவ்வாறு பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் கூடு கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாத நபர்களினால் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் உள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் கல்வி பயிலும் சகல இன மாணவர்களும் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனுமே தமது கற்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஒவ்வொருவருடைய இன மத, சமய சமூக பண்பாட்டு விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்தந்தக் காலப்பகுதிகளில் அவரவர் கலாசார நிகழ்வுகளும் இடம்பெறுவது வழமையாகும். அந்த வகையில் கடந்த வார இறுதியில் பௌத்த மாணவர்களால் 30, 31ஆம் திகதிகளில் வெசாக் நிகழ்வுகளை நடத்துவதற்கு முறையாக அனுமதி கோரப்பட்டிருந்தது. சகல மதங்களுக்கும் சம மரியாதை அளிக்கும் வகையில் நிகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 30ஆம் திகதி சனிக்கிழமை எந்தவித அசம்பாவிதங்களுமின்றி நிகழ்வுகள் நிறைவு பெற்றிருந்தன. 31ஆம் திகதி இரவு வரை நிகழ்வுகள் அமைதியான முறையில் நடைபெற்று முடிந்த பின்னர் பின்னிரவு 10:50 மணியளவில் முகங்களைத் துணியால் மூடியபடி மதில் வழியாகப் பாய்ந்து உள்நுழைந்த இனந்தெரியாத இரண்டு பேர் பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த வெசாக் அலங்காரத்தை அடித்து சேதப்படுத்துவதைக் அவதானித்த கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களினை நோக்கிச்செல்ல அவர்கள் மதில் பாய்ந்து தப்பிச்சென்றனர்.

அதன் பின்னர் மீண்டும் நள்ளிரவு 12:50 மணிக்கு மீளவும் மதில் வழியால் குதித்து உள்நுளைந்துள்ளனர். மீண்டும் அதனைக் கண்ணுற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களை விரட்டிச் சென்றபோது அவர்கள் மதிலேறித் தப்பிச் சென்றுவிட்டனர். சம்பவம் தொடர்பில் அந்த நேரத்தில் பீடாதிபதிக்கு அறிவிக்கப்பட்டு உடனடியாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பீடத்துக்கு விரைந்து வந்து தகவல்களைப் பெற்றதோடு மறுநாள் துணைவேந்தரின் அறிவுறுத்தலுக்கமைய பதிவாளரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இவ் அநாகரிக செயலில் ஈடுபட்டவர்களைக் கண்டு பிடிப்பதற்கான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பீடத்தில் வழமையான கற்கை நடவடிக்கைகள் ஒற்றுமையாக நடைபெறுகின்றது. இதற்கிடையில் இந்தச் சம்பவத்தின் அடிப்படையில் இன நல்லுறவைப் பாதிக்கும் வகையிலான தேவையற்ற செய்திகள் பரவிய வண்ணமுள்ளன. அடிப்படையில் பல்கலைக்கழகத்தின் சுமூகமான இயக்கத்தைக் குழப்பும் வகையிலும் தமிழ் சிக்கள மாணவர்களிடையே காணப்படும் புரிந்துணர்வைக் குழப்பும் வகையில் இந்தச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. மாணவர்கள் மிகத் தெளிவாக உள்ளனர். எனவே பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டாம் -என்றுள்ளது. (ம-26)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் சிறுவர் பூங்கா அமைக்க நிதி

யாழ்ப்பாணம், ஜூன் 3

பதுளை உடுவரை மேற்பிரிவு தமிழ் வித்தியாலயத்தில், சிறுவர் பூங்கா அமைப்பதற்கு, சந்நிதியான் ஆச்சிரமத்தால் முதலாம் கட்ட உதவியாக ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

193 மாணவர்கள் கல்வி பயிலும் பதுளை உடுவரை மேற்பிரிவு தமிழ் வித்தியாலய நிர்வாகத்தின் கோரிக்கைக்கமைவாக, பாடசாலை வளாகத்தில் சிறுவர் பூங்கா அமைப்பதற்காக இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று முதலாம் கட்ட நிதியுதவியை வழங்கினார். (க-66)

# கிட்டுப்பூங்காவில் உலக பனை தினம்

மண்ணின் அடையாளம், வாழ்வாதாரம் மற்றும் பாரம்பரியத்தின் சின்னமான பனை மரத்தைப் போற்றும் உலக பனை தின நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை யாழ். கிட்டு பூங்காவில் இடம்பெறவுள்ளது. இதில் பனை சார்ந்த விற்பனை நிலையங்கள், விளையாட்டுகள், கலாசார நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (க)


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 05.05.2026 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பொன்னையா சண்முகசுந்தரம்**

(ஓய்வுபெற்ற செயலாளர் - யாழ் மாவட்ட கூட்டுறவு சபை, முன்னாள் அதிபர் - கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி)

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து பல்வேறு வகைகளிலும் அஞ்சலி செலுத்திய ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது 31ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (04.06.2026) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் சீனியர் ஒழுங்கையிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இல. 5, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.06. 2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.